பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

துரித தபால்,பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

வலம்புரி

Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | புரட்டாதி 03 | சனிக்கிழமை | (20.09.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 275

# புலிகளின் திட்டவரைபை அரசு நிராகரித்தால்

# தற்கொலைத் தாக்குதலை நடத்த

# கொழும்பு மாநகரில் 800 புலிகள்

## எச்சரிக்கிறது பொ.ஐ.முன்னணி

(நமது நிருபர்)

**சமாதான முயற்சியில் இணைந்து செயற்படும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் மற்றும் திட்டவரைபுகளை அரசாங்கம் நிராகரித்தால், உடனடியாக நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக விடுதலைப் புலிகளின் 800 இற்கும் அதிகமான தற்கொலைப் போராளிகள் தலைநகர் கொழும்பில் தயாராக இருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணி எச்சரிக்கை விடுத்துள்ளது.**

ஐக்கிய தேசிய முன்ன்ணி அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடரும் சமாதான முயற்சிகளின் அடிப்படையில், தற்போதைய அமைதிநிலை காணப்பட்டாலும் எந்நேரமும் பாரிய தாக்குதலை நிகழ்த்தக் கூடிய வகையில், விடுதலைப் புலிகள் தயாராகி இருப்பதாகக் குற்றம்சாட்டியுள்ள பொது ஜன் ஐக்கிய முன்னணி அமைதி முயற்சியில் விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் மற்றும் திட்ட வரைபுகளை அரசாங்கம் நிராகரித்தால் தலைநகர் கொழும்பில் பாரிய தாக்குதல்கள நிகழும் என்றும் எச்சரித்துள்ளது.

சமாதான முயற்சிகள் முறிவடைந்தால், பாரிய தாக்குதலைத் தொடுக்கும் வகையில், கொழும்பு மாநகரில் 800ற்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் தற்கொலைப் போராளிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

தற்கொலைப் போராளிகள் கொழும்பில் தங்கியிருக்கும் விடயம் பாதுகாப்பு அமைப்புக்குத் தெரியும். எனினும் விடுதலைப் புலிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கில், அரசாங்கம் செயற்பட்டு வருவதால், பாதுகாப்பு

(10ம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழில் கலந்து கொள்ள ஜனாதிபதி-பிரதமருக்கு அழைப்பு

(திருநெல்வேலி)

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் பொங்கு தமிழ் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன் எதிர்க் கட்சித் தலைவர் மற்றும் நோர்வே, யப்பான் இந்தியா, அமெரிக்கா உட்பட வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் ஆகியோருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொங்கு தமிழ் நிகழ்வின் ஊடக இணைப்பாளர் வசந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொங்குதமிழ் நிகழ்வுக்கு தம்மால் பாதுகாப்பு வழங்க முடியாதென வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளதாகவும், எனினும் திட்டமிட்டவாறு பொங்கு தமிழ் நிகழ்வு நடைபெறுமெனவும்அவர் கூறினார். (இ-5,43)

## அரச அலுவலகங்களில் திலீபனின் நிகழ்வு நடைபெறக் கூடாது

### வடமராட்சியில் படையினர் எச்சரிக்கை

(திருநெல்வேலி)

தியாகி திலீபனின் நினைவு நாளை அரச அலுவலகங்களிலோ, பாடசாலைகளிலோ அனுஷ்டிக்கக் கூடாதென வடமராட்சி இராணுவத்தினர் நேற்று எச்சரித்துள்ளனர்.

கரவெட்டி தென்மேற்கு பிரதேச செயலகத்திற்கு நான்கு தடவைகள் சென்ற படையினர் திலீபனின் நினைவுப் பந்தலை அகற்றுமாறு தன்னை எச்சரித்ததாக பிரதேச செயலர் என்.பசுபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்குச் சென்ற படையினர் அரச பாடசாலைகளில் இவ்வாறான நிகழ்வுகளை நடத்தக்

(10ம் பக்கம் பார்க்க)

## போலியோ சொட்டு மருந்து இன்று வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் பத்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கு இன்று போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது.இன்று காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை சகல சுகாதார வைத்திய நிலையங்கள், சனசமூக நிலையங்கள் மற்றும் இதற்கென ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்.மாநாகர சபை எல்லைப் பகுதியினுள் 22 நிலையங்களில் போலியோ தடுப்பு சொட்டு மருந்து வழங்கப்படும்.

இதேவேளை நெடுந்தீவு கிழக்கு, மத்தி, (10ம் பக்கம் பார்க்க)

## தமிழரின் உரிமைப் போருக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் செயற்படவில்லை

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் பெருமிதம்

(கொழும்பு)

தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டத்திற்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் ஒரு போதும் செயற்பட்டதில்லை.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் வாழைச்சேனையில் இடம்பெற்ற வன்முறைகளில் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்கும் வைபவம் வாழைச்சேனை முஸ்லிம தேசிய பாடசாலையில் நேற்று இடம்பெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இலங்கையில் வாழும் சகல சமூகத்தவரிடமும் அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. அதிகாரங்களைப் பரவலாக்குவதன் மூலம் இனச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதையே முஸ்லிம் காங்கிரஸ் விரும்புவதுடன் அதற்குத் தயாராகவும் உள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## கனேடியத் தூதுவர் ரேமண்ட் தமிழ்ச்செல்வனை சந்தித்தார்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனுக்கும், கனடாவுக்கான இலங்கைத் தூதுவர் வலேரிறேமண்ட் அம்மையாருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

இச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு பற்றியும் தமிழ்ச்செல்வன் விளக்கிக் கூறினார்.

இதேவேளை தான் விடுதலைப் புலிகளைச் சந்தித்ததன் நோக்கம், தேக்கமடைந்திருக்கும் சமாதானப் பேச்சுக்களை விரைவாக ஆரம்பிப்பதற்கு தடையாக உள்ள பிரச்சினைகள் பற்றி ஆராய்வதே என்று தூதுவர் வலேரிறேமண்ட் தெரிவித்துள்ளார். (இ)



## பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இன்று நியுயோர்க் பயணம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் 58வது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இன்று நியுயோர்க் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 23-ந் திகதி ஆரம்பமாகவுள்ள இப்பொதுச் சபைக் கூட்டத்தில் பிரதமர் 26-ந் திகதி உரை நிகழ்த்தவுள்ளார்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் பல்வேறு நாடுகளின் தலைவர்களை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். (10ம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆட்சேர்ப்பு முடிவு திகதி நீடிப்பு

(கொழும்பு)

இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பின் முடிவுத் திகதி இந்த மாத இறுதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தது.முன்னர் அறிவித்திருந்த முடிவுத் திகதிக்குள் எதிர்பார்த்தளவு பேரை சேர்த்துக் கொள்ளமுடியாததாலேயே முடிவுத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆட்சேர்ப்பிற்கான நேர்முகத் தேர்வு ஆரம்பித்த ஆகஸ்ட் 19 தொடக்கம் மொத்தமாக 3296 பேர் நேர்முகத்தேர்விற்கு சமூகமளித்திருந்தனர். (10ம் பக்கம் பார்க்க)

# தாய்லாந்துப் பொலிஸார் புலிகளுக்கு அயுதம் வழங்கினரா?

## அந் நாட்டில் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்கினர் என்ற குற்றச்சாட்டில் ஒன்பது தாய்லாந்துப பொலிஸார் மீது விசாரணை நடத்தப்படுவதாக தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சின்வற்றா தெரிவித்துள்ளார். இது பற்றிய விசாரணைகளை தாய்லாந்தின் விசேட பொலிஸ் பிரிவு கவனித்து வருகிறது. புலிகளுக்கு அவர்கள் துப்பாக்கிகளும் வெடி பொருட்களும் வழங்கினார்கள் என்பது நிரூபிக்கப்படுமாயின் அவர்களுக்கு எதிராக கிரிமினல் குற்றச்சாட்டுகள் விதிக்கப்படும்

கடந்த மே மாதத்தில் மூன்று இலங்கையர்கள் பாங்கொக்கிலிருந்து 570 கி.மீ. தெற்காக உள்ள றனோங் நகரில் உள்ள ஹோட்டல் ஒன்றின் கார்கள் நிறுத்தும் இடத்தில் வைத்து கைது செய்யப்பட்டனர். இந்நேரத்தில் அவர்கள் 9.மி.மீ பிஸ்ரல்கள் 10உம், 11.மி.மீ பிஸ்ரல்கள் 3உம், 45ஆயிரம் துப்பாக்கி ரவைகளும் வைத்திருந்தனர்.

பாங்கொக்கிலிருந்து கொண்டு வரப்பட்ட அந்த ஆயுதங்கள் அங்கிருந்து வெளிநாடு ஒன்றிற்கு கடத்தப்பட இருந்தன என்றும் இவ்வாறு இதற்கு முன்னரும் பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் புலனாய்வு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பாங்கொக் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இந்தப் பொலிஸார் மீது விசாரணைகள் நடத்துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேஜர் ஜெனரல் பனுபொங் சிங்கார தெரிவித்தார். 9பொலிஸார் மீதும் இதுவரை ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. அவர்கள் புலிகளுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டிருந்தார்களா என்பது பற்றிய விசாரணைகளை எதிர்நோக்கிக் காத்திருப்பதாக பனுபொங் தெரிவித்தார். (ந)

# திக்கம் வடிசாலை உற்பத்திகள் தென்பகுதிக்கு ஏற்றுமதி

## பூர்வாங்க ஏற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திக்கம் வடிசாலை உற்பத்திகளை தென்பகுதிக்கு ஏற்றுமதி செயவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகின்றது.

திக்கம் வடிசாலை உற்பத்திகளுக்கு தென்பகுதி மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருப்பது கண்டறியப்பட்டதையடுத்தே, இவற்றினை அங்கு ஏற்றுமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரம் பெறும் நடவடிக்கை தற்போது இடம் பெற்று வருகின்றது.

இதேவேளை, இந்த ஏற்றுமதி மூலம் உளளூரில் வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க முடியும் என்பதுடன், பனை வளத்தை நம்பி வாழும் குடும்பங்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)

# யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சு மொழி நிலையம் அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

அண்மையில் பிரான்ஸ், சிங்கப்பூர், ஆகிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த புனர்வாழ்வு, மீள் குடியமர்த்தல் மற்றும் அகதிகள் விவகாரங்களுக்கான அமைச்சர் பேராசிரியர் ஜெயலத் ஜயவர்த்தன பிரான்ஸ் நாட்டின் வெளிநாட்டு அலுவலகள் ராஜாங்க அமைச்சர் ரெனால்ட் முசலியரைச் சந்தித்த போது யாழ்ப்பாணத்தில் பிரெஞ்சு மொழி நிலையம் ஒன்று அமைப்பது தொடர்பாகவும் யாழ். நகரில் உள்ள திறந்த வெளியரங்கை புனரமைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளனர்.

இது குறித்து விசேட நிபுணத்துவம் கொண்டவர்களை விரைவில் இப் பணியில் அமர்த்துவதெனவும் அங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை சிங்கப்பூர் விஜயத்தின் போது இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவர் டன்காவோ மற்றும் வைத்திய நிபுணர் காமல்கோஷ் ஆகியோரைச் சந்தித்த அமைச்சர் வடக்கு கிழக்கு பகுதியில் முறிவு நெறிவு நிபுணர்களான மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்கும் அதற்கென விசேட நிபுணர்களை இலங்கைக்கு அனுப்புவது ஆகிய தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்தவர்களும் இப்பணியில் தங்களது பங்களிப்பினை தொண்டர் அடிப்படையில் வழங்கவுள்ளனர். (உ)

# தாய்லாந்து இராணுவத்திடம் கண்ணி அகற்றும் பயிற்சி முடித்து மேலும் 45 பேர் வெளியேற்றம்

(கிளிநொச்சி)

தாய்லாந்து இராணுவத்தினிடம் கண்ணிவெடி அகற்றும் பயிற்சிகளை நிறைவு செய்த மனிதநேயக் கண்ணிவெடிஅகற்றும் பிரிவைச் சேர்ந்த 45 தொண்டர்கள் நேற்று முன்தினம் சான்றிதழ்களைப் பெற்று கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைக்குத் தயாராகி உள்ளனர்.

கடந்த 21 தினங்களாக தாய்லாந்து இராணுவத்தின் 10 அதிகாரிகள் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் 45 தொண்டர்களுக்கு கண்ணிவெடி நடவடிக்கை நிலையத்தில் பயிற்சிகளை வழங்கி வந்தனர்.

பயிற்சியின் இறுதி வைபவம் நேற்று முன்தினம் பரந்தனில் உள்ள மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் பயிற்சி முகாமில் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் கே.பி.றெஜி தலைமையில் நடைபெற்றது. (உ-64,8)

# ஊனமுற்றோருக்கு ஊன்றுகோல்கள்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஊனமுற்றோர் தமக்கு ஊன்றுகோல்கள் மற்றும் சக்கர நாற்காலிகள் ஆகியன தேவைப்படின் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கரைச்சி பிரதேச செயலர் பொன்நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான உபகரணங்கள் கடந்த சிலமாதங்களுக்கு முன் சமூக சேவைகள் அமைச்சினால் வழங்கப்பட்டது. அப்போது பெறத் தவறியவர்களும் அதற்குப் பின்னர் ஊனமடைந்தவர்களும் இந்த உபகரணங்களைப் பெறமுடியும்.(உ-35)

# நாகர்கோயில் தாக்குதல் நினைவுதினம் அனுஷ்டிப்பு

(திருநெல்வேலி)

1995ம் ஆண்டு நாகர்கோயில் மகாவித்தியாலயம் மீது இலங்கை விமானப்படை மேற்கொண்ட தாக்குதலின் போது பலியான மாணவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினம் எதிர்வரும் 22ந் திகதி தும்பளையில தற்காலிகமாக இயங்கிவரும் நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சியிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் யாழ்ப்பாண பாடசாலைகளிலிருந்தும் மாணவப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நினைவு நாளை எழுச்சி மிகு நாளாக பிரகடனப்படுத்துவதற்கு மாணவ சமூகத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

1995ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ந் திகதி நாகர்கோயில் மகாவித்தியாலயத்தின் மீது விமானப்படை மேற்கொண்ட தாக்குதலில் 20ற்கு மேற்பட்ட மாணவர்களும் பொதுமக்களும் பலியானமை குறிப்பிடத்தக்கது. (இ-5,43)

# சிகிச்சையளித்த வைத்தியரை யானை மிதித்துக் கொன்றது

## பாகன் அதிர்ச்சியில் மரணம்

(மாவனெல்ல)

யானைக்கு. சிகிச்சையளிக்க வந்த வைத்தியர் அந்த யானையாலேயே கொல்லப்பட்டார். இதைப் பார்த்த யானைப் பாகன் அதிர்ச்சியடைந்து தானும் மரணமானான்.

அரணாயக்காவில் அமபேகொட என்ற இடத்தில் உள்ள மியனயாலன கிராமத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது. கதிர்காமத்தில் ஆலயப் பணிகளில் கலந்து கொண்டு விட்டுத் திரும்புகையில் சுகவீனம் உற்றதால் அந்த யானையை அதன் பாகன் யானை வைத்தியரிடம் கொண்டு சென றார்.ஆனால் யானை வைத்தியரைப் பிடித்து காலால் மிதித்தும் வாயில் தந்தக்களுக்கிடையில் வைத்து நசுககியும் கொன்றுவிட்டது. இதைப் பார்த்த யானைப்பாகன் அதிர்ச்சியடைந்து வீழ்ந்து மரணமானான். (பி)

# இரண்டு பொலிஸாரும் புலிகளால் விடுதலை

(கொழும்பு)

திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கும்புறுப்பிட்டி பிரதேசத்தில் வைத்து இவர்கள் இருவரையும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

திருகோணமலை பொலிஸ் அத்தியட்சகர் உபாலி ஹேவறேக்கிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக்கிற்குமிடையே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையை அடுத்தே இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (தி-61)

# பாடசாலைக்கு அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய அபிவிருத்திக்கென கனடாவில் வசிக்கும் நீர்வேலி இளைஞர்கள் 76 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளனர். இந் நிதி விரைவில் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவுள்ளது. (இ-5)

# தையல் இயந்திரம் வழங்கல்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 பயனாளிகளுக்குத் தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

மேற்படி தையல் இயந்திரம் வழங்கும் நிகழ்வு, புனர்வாழ்வு நிறுவனத்தின் முதன்மைச் செயலக இணைப்பாளர் கமலாம்பிகை தலைமையில் பெண்கள் தொழிற்பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (உ-35)

# அரியாலை அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்களின் காரணமாகச் சேதமடைந்த நிலையில் பலகாலமாக கவனிப்பாரற்று இருக்கும் அரியாலைப் பகுதியில் வீதி புனரமைப்பு மற்றும் குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி மேற்கொண்ட முயற்சியின் பலனாக மேற்படி பகுதியில் குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க யாழ். மாநகர சபையும், வீதி புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள ஜி.ரி.சற். நிறுவனமும் இணங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-18)

# அரச ஊழியருக்கு மும்மொழித் தேர்ச்சி

(பளை)

வடக்குக் கிழக்கு மாகாணசபை ஊழியர்களுக்கு முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தால் மும்மொழித் தேர்ச்சிப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

இப் பயிற்சிநெறி அரச கருமமொழித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளதாகவும் மேற்படி பயிற்சி வகுப்பில் பங்குபற்ற விருப்பமுள்ளவர்களுடைய பெயர் விபரங்களை விரைவில் அனுப்பி வைக்கும்படி வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலர் சகல திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளார். (பி-97)

# கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 26-ம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் 15 நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4-ம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை "தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (உ-18)

# அரசாங்கம் துரோகம் இழைக்கிறது "ஜாதிக பிக்கு பெரமுன" குற்றச்சாட்டு

(கொழும்பு)

"ஜாதிக பிக்கு பெரமுன" என்னும் பிக்குமார் அமைப்பு கடந்த புதன் பிற்பகல் கண்டி தலதா மாளிகைக்கு எதிரில் சத்தியாக் கிரகமொன்றை நடத்தியது. மேற்படி அமைப்பின் கண்டி கிளையின் செயலாளர் வண. பம்பரகஹாந்த ஞானசீக தேரர், கண்டி மாவட்ட ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் டி.பண்டார அபேயகோன் ஆகியோர் உட்பட இவ்அமைப்பின் ஏனைய அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். இங்கு உரையாற்றிய ஞானசீக தேரர் நாட்டில் பொறுப்பானவர்களும், அஸ்கிரிய, மல்வத்தை தேரர்களும் மௌனமாக இருந்த போதிலும் நாம் அவ்வாறிருக்கவில்லை. கடந்த காலத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இத்தேரர்கள் பிரித் ஓதிக்கொண்டிருந்தனர்.

அரசாங்கம் எம்மை எங்கு அழைத்துச் சென்றுள்ளது என்பதை அறிய முடியவில்லை. எமது வீரமிகு படையினர் முகாம்களுக்குள் முடக்கி வைககப்பட்டுள்ளனர். அரசாங்கம் அனைவருக்கும் துரோகம் இழைப்பதுடன் தனது நலத்தினைப் பற்றி மட்டுமே கவனமாகவுள்ளது. நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. எல்லாவற்றையும் விற்று முடிந்தபின் எமது நிலத்தையும் நீரையும் கூட விற்கும்படியான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன, இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பிக்குகள் அனைவரும் கெதம்பே ராஜபவனாராம கோவிலில் கூடி தலதா வீதி வழியே பிக்குகளினது கொடியையும் தேசிய கொடியையும் தாங்கிய வண்ணம் சென்று தலதா மாளிகைக்கெதிரில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்திருந்தனர். ஒரு மணி நேரத்தின் பின்னர் இவர்கள் அமைதியாக கலைந்து சென்றனர். (ந)

# ஆய்வு கூட வசதி இல்லை

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான ஆய்வு கூடம் மற்றும் நூலகம் ஆகிய வசதிகளின்றி மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரம்-1 முதல் உயர் தர வகுப்புக்கள் வரை மேற்படி பாடசாலையில் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது. (உ-35)

# பரிசளிப்பு விழா

(கந்தரோடை)

யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் பரிசளிப்பு விழாவும் கலைவிழாவும் எதிர்வரும் 22-ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாசாலை அதிபர் பொ.கணேஸ்வரலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய மாவட்ட நதிபதி மு.திருநாவுக்கரசும் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-103)

# பூநகரியில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை

(கிளிநொச்சி)

பூநகரி வெட்டுக்காட்டுப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இதே இடத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான க. ரவீந்திரன் (வயது28) என்பவரே இவ்வாறு அடித்துக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மேற்படி நபருக்கும் மைத்துனருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இவரை மைத்துனர் அடித்துக் கொலைசெய்தார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளன.

மேலதிக விசாரணைகளை பூநகரி நாவற்குடா காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(தி-61)

# பனம் பொருள் பல்தொகுப்பு நிலையம் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் பனம் பொருள் பல்தொகுப்பு நிலையம் ஒன்று காரைநகரில் நிறுவப்படவுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையினால நிர்வகிக்கப்படவுள்ள இந்நிலையத்தை நிறுவுவதற்கென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 860 இலட்ச ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

வடபகு.தியில் பனம்பொருள் உற்பத தியை ஊக்குவித்தல், உற்பத்தி செய் தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்படவுள்ள இந்த பனம்பொருள் பல்தொகுப்பு நிலையத்தில் பனம் உற்பத்திகள் அனைத்தையும பெற்றுக்கொள்ளமுடியும்.

(உ-4)

## க.கா.குழு அனுசரணையின்றி

# முஸ்லிம்-விடுதலைப்புலிகள் இன்று முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணையின்றி தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான முக்கிய சந்திப்பொன்று இன்று நடைபெறவுள்ளது.

கரடியனாறு ''தேனகம்'' விடுதியில் நடைபெறவுள்ள இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் கருணா, விசேடதளபதி ரமேஷ் அரசியல்துறைப் பொறுப்பாளர் ஏ.கௌசல்யன், நிதிப் பொறுப்பாளர் குகனேசன், பொருண்மியப் பொறுப்பாளர் நிசாம், மட்டக்களப்பு நகர அரசியல் துறைப்பொறுப்பாளர் சேனாதி, அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாபா, துணைப் பொறுப்பாளர் குயிலன்பன் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஜனார்த்தனன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முஸ்லிம் தரப்பில் சகல கிராமங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முஸ்லிம் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அனுசரணை இன்றி நடைபெறும் இச்சந்திப்பில் முஸ்லிம்- தமிழ் மக்களுக்கிடையே ஐக்கியத்தை கட்டியெழுப்பும் வகையில் நடைமுறைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும்.


(தி-61)





யாழ். போதனா வைத்தியசாலைக்கு அம்புலன்ஸில் கொண்டுவரப்பட்ட அவசர நோயாளி ஒருவர் சுகாதார சேவைகள் ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக தூக்கிச்செல்ல ஆட்களில்லாத நிலையில் காத்திருக்கின்றமையை முதலாவது படத்திலும், சுகாதார சேவைகள் ஊழியரின் பணியில் ஈடுபட்டுள்ள வைத்தியர் ஒருவரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்:- ஜெராட்)

## கைகள் தடுக்கிறதோ...?




# வீதித் தபால்பெட்டி கடிதச் சேகரிப்புக்கு மோட்டார் சைக்கிள் வழங்கக் கோருவதெனத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து அஞ்சல் அலுவலகங்களும் காலை 7.00மணி முதல் மாலை 6.00 மணி வரை பொதுமக்கள் தேவைக்காக திறக்கப்படுவதுடன் யாழ்ப்பாணப் பிராந்திய தபால் தரம் பிரிக்கும் நிலையம் இரவு 9.00 மணி வரை திறந்து தபால் வேலைகள் கவனிக்கப்பட வேண்டும்.

ஏனைய அஞ்சல் அலுவலகங்களின் தபால் பைகள் மாலை 4.00 மணிக்குப் பின்னரே மூடப்படுதல் வேண்டும்.

இவ்வாறு, ஸ்ரீலங்கா தபால் தொலைத் தொடர்பு சேவைச் சங்கத்தையும் அவற்றினை நடைமுறைப்படுத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கோருவதென தபால் தொலைத் தொடர்புச் சேவைச் சங்கத்தின் வடபிரதேச கிளை தீர்மானித்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி யாழ்.பிரதம அஞ்சல் அலுவலகத்தில் இடம் பெற்ற மேற்படிச் சங்கத்தின் வட பிரதேசக் கிளையின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை பொது மக்கள மற்றும் தபால் சேவைகளுக்காகத் திறக்கப்படல் வேண்டும்.

எல்லா அஞ்சல் திணைக்களக் கடமைகளுக்கும் ஒவ்வொரு வெற்றிடமும,அது எந்த வகையினதாக இருப்பினும்,நான்கு மணி நேரத்திறகுக் குறையாத மேலதிக நேரக் கொடுப்பனவினால் ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

நீண்ட காலமாக வடபகுதித் தபாலகங்களுக்கு நலன்புரி தளபாடங்கள் வழங்கப்படவில்லை. அஞ்சல் அதிபர்களின் கோரிக்கைகளின் மீது அவற்றினை துரிதமாக வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

யாழ்ப்பாண அஞ்சல் அலுவலகம் தனது வீதித் தபால் பெட்டி கடிதச் சேகரிப்புக்களை மாலை 4.00 மணிக்கு பின்னர் மோட்டார் வாகனம் ஒன்றின் மூலமாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அண்மையில் திறக்கப்படவுள்ள யாழ். அஞ்சல் வளாகத்தினில் முழுமையானதொரு நவீன அஞ்சல் பயிற்சி நிலையத்தினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் ஆகியன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இதில் எடுக்கப்பட்டன.

(உ-10)

## தகவல் தொழில் நுட்பத்தை

# தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்ப நிலையத்தை தனியார் மயப்படுத்தும் திட்டத்திற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் தமது அடிப்படை உரிமைகளை மீறுவதாக உள்ளது என நிறுவனத்தில் பணிபுரியும் 18 நிரந்தர ஊழியர்களும் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இம்மனுவில் விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட உட்பட நிறுவனம் சார்ந்த பல பிரதிநிதிகள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அம்மனுவில் இது தொடர்பான அரச வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக மாற்றுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-60)

## தலைமன்னார்க் கடலில்

# கைதான 5 பேருக்கும் 22வரை விளக்கமறியல்

(கொழும்பு)

தலைமன்னார் கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்ட 5 பேரையும் எதிர்வரும் 22ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம்.அப்துல்லா நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை இரவு சந்தேகத்திற்கிடமான படகொன்றை சுற்றி வளைத்த கடற்படையினர், படகில் பயணம் செய்த 5 பேரையும் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில், இந்தியா ஒருவர் உட்பட இவ் 5 பேரும் பேசாலையில் இருந்து புறப்பட்டனர் எனத தெரியவந்துள்ளது.

(தி-61)

# விதவைக் குடும்பங்களுக்கு வட்டியில்லாக் கடனுதவி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் கடந்த கால யுத்த நடவடிக்கைகளால் குடும்பத் தலைவர்களை இழந்த விதவைக் குடும்பங்களுக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வட்டியில்லாத சுயதொழில் முயற்சிக் கடன்களை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், மேற்படி திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட விதவைகளில் 20 பேருக்கு தலா 15 ஆயிரம் ரூபாவும், 2 பேருக்கு 25 ஆயிரம் ரூபாவும் வட்டியில்லாக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

இந்நிதியின் மூலம் சுயதொழில் முயற்சிகளை மேற்கொண்டு அதில் உழைக்கும் வருமானத்தில் மாதாந்தம் பகுதி பகுதியாக குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி தமது கடனை மீளளிக்கலாம் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

(உ-35)

# இரவுவேளை இனந்தெரியாதோரால் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதவர்களால் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் உடுவிலைச் சேர்ந்த இரு இளைஞர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுவில் தெற்கைச் சேர்ந்த எம்.ஜெயசீலன் (வயது35), எஸ். ரமேஸ் ஆகியோரே வீட்டுக்கு அருகாமையில் உள்ள வீதிப் பகுதியில் வைத்து கடந்த புதனன்று இரவு இவ்வாறு தடிகள், பொல்லுகளால் தாக்கப்பட்ட நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(உ-7)

# மத்திய கிழக்குக்கான அமெரிக்க திட்டம் ஸ்தம்பிதம் ஆகிவிட்டது

## ஒப்புக்கொள்கிறார் அதிபர் புஷ்

## மீண்டும் செயற்படுத்தவும் ஆர்வம்

(வாஷிங்டன்)

மத்திய கிழக்கு சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான ''பாதை வரைபடம்'' (Road Map) ஸ்தம்பிதம் அடைந்திருப்பதை அமெரிக்க ஜனாதிபதி முதற் தடவையாக ஒப்புக்கொண்டுள்ளார்.

எனினும், இத்திட்டத்தை மீண்டும் செயற்படுத்தி வெற்றிபெறச் செய்வதற்கும், அதனூடாக பலஸ்தீன இராச்சியத்தை உருவாக்குவதற்கும் திடசங்கற்பம் பூண்டிருப்பதாக அவர் மேலும் கூறியுள்ளார்.

கேம்ப் டேவிட்டிலுள்ள விடுமுறைக்கால ஓய்வுவிடுதியில் ஜோர்தான் மன்னர் அப்துல்லாவை நேற்று முன்தினம் சந்தித்த பின்னரே புஷ் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

யஸீர் அரபாத் பலஸ்தீனத் தலைமைப் பொறுப்பை நிறைவேற்றத் தவறிய தலைவர் எனவும், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.

இதேவேளை, அமெரிக்க ஆதரவுடன் நியமிக்கப்பட்டு பதவி விலகியுள்ள பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸை புஷ் புகழ்ந்து பேசியுள்ளார்.

### 87 பில்லியன் டொலர் திட்டம்

ஈராக்கைக் கட்டியெழுப்பவும், அங்கு மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கும் என 87 பல்லியன் டொலர் திட்டம் ஒன்றை வெள்ளை மாளிகை அமெரிக்க காங்கிரஸ் சபைக்கு அனுப்பியிருக்கிறது. வரும் நான்கு ஆண்டுகளில் ஏனைய நாடுகளின் நன்கொடைகள் மூலமும், ஈராக்கிய எண்ணை வளங்களில் இருந்தும் 30 இல் இருந்து 55 பில்லியன் டொலர் கிடைக்கும் சாத்தியம் இருப்பதாகவும் வெள்ளை மாளிகை தன் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளது.

அதிபர் புஷ்ஷின் இந்தத் திட்டத்தைக் கவனமாக ஆராய்வதற்கு ஜனநாயக, குடியரசுக் கட்சிகளின் உறுப்பினர்கள் உறுதியளித்துள்ளனர். ஆனால், அண்மையில் இடம்பெற்ற ஒரு கருத்துக் கணிப்பில் இந்தத் திட்டத்தை 60வீத அமெரிக்கர்கள் எதிர்க்கிறார்கள் என்று தெரியவந் துள்ளது. (பி-2)

## ஈராக்கில் எண்ணெய்க் குழாய் வெடித்தது

(பாக்தாத்)

ராக்கிலிருந்து துருக்கிக்குச் செல்லும் முக்கிய எண்ணெய்க் குழாய் வியாழக்கிழமை வெடித்து தீப்பற்றியது. பாக்தாதிலிருந்து 200 கி.மீ. தொலைவிலுள்ள பேஜி என்ற என்ற நகரத்தில் இது நிகழ்ந்ததாக நேரில் பார்த்தவர் தெரிவித்தார். குழாய் வெடித்ததற்கான காரணம் தெரியவில்லை. (பி)

உலக தரிசனம்

## அமெரிக்காவின் கிழக்குக்கரையை

# இஸபெல் சூறாவளி தாக்கியபடி நகர்கிறது

## ஞாயிறு கனடாவை அடையும்



(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கிழக்கில் தரைப் பகுதியில் நுழைந்த இஸபெல் சூறாவளி வீடுகளின் கூரைகளைத் தகர்த்தும், மரங்களை வீழ்த்தியும், மின்கம்பிகளை அறுத்தும் தனது ஆவேசத்தைக் காட்டிக்கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தது. பலத்த மழை பெய்வதால், வெள்ள அபாயம் எதிர்நோக்கப்படுகின்றது.

மணிக்கு 90 மைல் (150 கிலோ மீற்றர்) வேகத்தில் வீசும் சூறாவளிக காற்று, இதுவரை 10 இலட்சம் மக்களுக்கு மின்சாரம் இல்லாமல் செயதுவிட்டது. வடகரோலினா, வேர்ஜினியா கரைப்பகுதியில் 10 ஆயிரம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள். ஏனையவர்கள் நிலைமை இன்னும் மோசமானால், வெளியேறுவதற்கு ஆயத்தமாக இருந்து வருகிறார்கள்.

அப்பிரதேசத்தின் பெரும்பகுதியில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. வாஷிங்டன் டி.சி. சஷ்டி அரச நிர்வாகம் உட்பட பல பாடசாலைகள், வர்த்தகக் காரியாலயங்கள யாவும் மூடப்பட்டுள்ளன.

வேர்ஜினியக் கடல் கடற்கரையை உடைத்துக்கொண்டு நகரை

## இந்திய முன்னாள் பிரதமர்

# ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக பிரபல சாமியார் மீது விசாரணை

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக பிரபல சாமியார் சந்திரா சாமியார்,சி.பி.யினரின் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினரால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

ராஜீவ்காந்தியின் படுகொலைச் சம்பவத்திற்கு முன்னரும், பின்னரும் இடம்பெற்ற பணப்பரிமாற்றங்கள் குறித்து அவரிடம் விசாரிக்கப்பட்டதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு முன்னரும், கொலை செய்யப்பட்ட பின்னரும் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெருமளவில் பணப்பரிமாற்றம் நிகழ்ந்துள்ளதாசக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தப்பணப்பரிமாற்றத்தில் பிரபல சாமியார் சந்திராசாமியார் உட்பட சிலருக்குத் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இநத நிலையில் சாமியார் நேற்று முனதினம் கண்காணிப்புக் குழு முன ஆஜரானார். சுமார் இரண்டு மணி நேரம் இந்த விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

## லண்டன் இடைத்தேர்தலில் தொழிற்கட்சி தோல்வி

(லண்டன்)

வட லண்டனில் இடைத்தேர்தல் ஒன்றில் தொழிற் கட்சியின் ஆசனம் ஒன்றை லிபரல் ஜனநாயகக் கட்சி மிக இலகுவாக வென்றுள்ளது.



ரொனி பிளேயரின் செல்வாக்கு மக்களிடம் குறைந்து வருவதையே காட்டுகின்றது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

லண்டனில் பிரன்ட் ஈஸ்ற் தொகுதி இடைத்தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சியின் சாராரீத்தர் என்பவர் 1100 வாக்குகளுக்கு மேல் அதிகமாகப் பெற்று வெற்றி பெற்றார். திருமதி ரீத்தருக்கு 8158 வாக்குகளும், அவருடன் போட்டியிட்ட றொபர்ட்ஸ் வொன்ஸிக்கு 7040

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைச் சம்பவம் தொடர்பாக பிரபல சாமியார் சந்திரா சாமியார்,சி.பி.யினரின் தலைமையிலான கண்காணிப்புக் குழுவினரால் விசாரணை செய்யப் பட்டுள்ளார்.

ராஜீவ்காந்தியின் படுகொலைச் சம்பவத்திற்கு முன்னரும், பின்னரும் இடம்பெற்ற பணப்பரிமாற்றங்கள் குறித்து அவரிடம் விசாரிக்கப்பட்ட தாக புதுடில்லிச் செய்திகள் தெரி விக்கின்றன.

ராஜீவ்காந்தி படுகொலை செய் யப்படுவதற்கு முன்னரும், கொலை செய்யப்பட்ட பின்னரும் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பெருமளவில் பணப்பரிமாற்றம் நிகழ்ந்துள் ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தப்பணப்பரிமாற்றத்தில் பிரபல சாமியார் சந்திராசாமியார் உட்பட சிலருக்குத் தொடர்புகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இநத நிலையில் சாமியார் நேற்று முனதினம் கண்காணிப்புக் குழு முன ஆஜரானார். சுமார் இரண்டு மணி நேரம் இந்த விசாரணைகள் இடம் பெற்றுள்ளன.

(பி-2)



டோக்கியோவில் உள்ள டிஸ்னிடேன்டில் "வயதானவர்களுக்கு மரியாதை செலுததும் தினம்" சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதில் வயதான 240 ஜோடிகள் கலந்து கொண்டு மிக்கி மவுஸ்களுடன் நடனமாடி மகிழ்ந்தனர். 63 வயதான பெண்மணி மிக்கி மவுசுடன் நடனமாடி மகிழும் காட்சி.

# தொழிற்கட்சி தோல்வி

(லண்டன்)

வட லண்டனில் இடைத்தேர்தல் ஒன்றில் தொழிற் கட்சியின் ஆசனம் ஒன்றை லிபரல் ஜனநாயகக் கட்சி மிக இலகுவாக வென்றுள்ளது.




தொழிற்கட்சியின் மிகப்பாது காப்பான தொகுதி எனக் கருதப் படும் இப்பகுதியில் லிபரல் ஜன நாயகக் கட்சி வெற்றிபெற்றிருப்பது ரொனி பிளேயரின் செல்வாக்கு மக்களிடம் குறைந்து வருவதையே காட்டுகின்றது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

லண்டனில் பிரன்ட் ஈஸ்ற் தொகுதி இடைத்தேர்தலில் லிபரல் ஜனநாயகக் கட்சியின் சாராரீத்தர் என்பவர் 1100 வாக்குகளுக்கு மேல் அதிகமாகப் பெற்று வெற்றி பெற் றார். திருமதி ரீத்தருக்கு 8158 வாக் குகளும், அவருடன் போட்டியிட்ட றொபர்ட்ஸ் வொன்ஸிக்கு 7040 வாக்குகளும் கிடைத்தன. கொன்சர் வேடிவ் வேட்பாளர் உமா பெர்ணான் டஸ் 3368 வாக்குகளுடன் 3ஆம் இடத்தையும் பெற்றார். கடந்த யூன் மாதம் புற்றுநோய் காரணமாக தொழிற்கட்சி உறுப்பினர் போல் டெயிஸ்லி மரணமானதை அடுத்து இந்த இடைத்தேர்தல் இடம்பெற்றது.

ஈராக் மீதான யுத்தத்தில் ரொனி பிளேயரின் செயற்பாடுகளை பிரிட்டிஷ் மக்கள் வெறுக்கிறார்கள் என்ப தையே இந்தத் தேர்தல் முடிவு காட்டுவதாகக் கூறப்படுகின்றது. (பி)

செயதுவிட்டது. வடகரோலினா, வேர் ஜினியா கரைப்பகுதியில் 10 ஆயி ரம் மக்கள் வீடுகளை விட்டு வெளி யேறி இருக்கின்றார்கள். ஏனைய வர்கள் நிலைமை இன்னும் மோசமானால், வெளியேறுவதற்கு ஆயத் தமாக இருந்து வருகிறார்கள்.

அப்பிரதேசத்தின் பெரும்பகுதி யில் அவசரகால நிலை அறிவிக் கப்பட்டுள்ளது. வாஷிங்டன் டி.சி. சஷ்டி அரச நிர்வாகம் உட்பட பல பாடசாலைகள், வர்த்தகக் காரி யாலயங்கள யாவும் மூடப்பட்டுள்ளன.

வேர்ஜினியக் கடல் கடற் கரையை உடைத்துக்கொண்டு நகரை நோக்கிப் பாய்வத''கு ஆயத்தமாகிக கொண்டு இருப்பதாக பி.பி.சி. நிருபர் ஒருவர் அறிவித்துள்ளார்.

"இஸபெல்" வேர்ஜினியாவை ஊடறுத்துக்கொண்டு அமெரிக்கத் தலை நகரை அடையும் என்றும் பின்னர் பென்சில்வேனியா வழியாக ஞாயிற்றுக்கிழமை கனடாவை அடை யும் என்றும் வழிமண்டல வியலாளர் கள் கருதுகின்றார்கள். சூறாவளி நகரும் பாதையிலிருந்து விலகிச் சென்றுள்ளவர் களில் அமெரிக்க அதிர் ஜோர்ஜ டபிள்யூ புஷ்ஷும் ஒருவர். (பி)

## அமைச்சர் கண்ணப்பனை

# பொடாவின் கீழ் கைது செய்ய தமிழக அரசு முடிவு

விடுதலைப் புலிகளைத் தொடர்ந்து ஆதரிப்போம் என்று பேசிய மறு மலர்ச்சித் தி.மு.கவை. சேர்ந்த மத்திய மரபுசாரா எரிசக்தித்துறை துணை அமைச்சர் கண்ணப்பன் மீது பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்து அவரைக் கைது செய்ய தமிழக அரசு முயற்சிதது வருவதாக கூறப்படுகிறது.

சென்னையில் உள்ள ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை "தியாக நெருப்பில் வைகோ"என்ற புத்தக வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய அமைச்சர் மு.கண்ணப்பன், புலிகளை ஆத ரித்துப் பேசியதில் தவறேயில்லை. தாராளமாகப் பேசலாம். விடுதலைப் புலிகள் இல்லாமல் ஈழத்தமிழர் களை வேறு ஓர் அமைப்பு காப் பாற்றிக்கொண்டிருந்தால், அவர்களை ஆதரிப்போம். இதுதான் ம.தி.மு.க வின் நிலை என்று பேசினார்.

அதுமட்டுமின்றி, இதைச் சொன் னால் கைதுசெய்து விடுவார்கள் என்று பயந்திருக்க முடியாது. ஏற் கனவே 25 முறை புலிகளைப் பற்றி பேசியதுடன், இப்பொழுது 26 ஆவது முறையாகப் பேசுகிறேன் என்று கண்ணப்பன் பேசினார்.

இந்தியாவில் தடைசெய்யப்பட் டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசியதற்காக எவ்வாறு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, வழக்குத் தொடரப்பட்டு வைகோ உள்ளிட்ட 9 ம.தி.மு.கவினர் சிறையில் அடைக் கப்பட்டுள்ளனரோ, அதேபோல பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்து அமைச்சர் கண்ணப்பனையும் கைது செயவது என்று தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக் செய்திகள் கூறுகின்றன.

கண்ணப்பனை பொடா சட்டத் தின் கீழ் கைது செய்வதற்கு ஏது வாக அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கவேண்டும் என்று தமி ழக அரசின் சார்பாக மத்திய உள் துறை அமைச்சகத்திற்கு வலியுறுத்த தமிழக உட்துறைச் செயலர் முனிர் ஹோடா தலைநகர் டெல்லி சென் றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அமைச்சர் பதவியிலிருந்து கண் ணப்பன் விடுவிக்கப்படும் பட்சத்தில் அவர் உடனடியாகக் கைது செய் யபபட்டுச் சிறையில் அடைக்கப்படுவார் என்று தமிழக அரச வட்டாரங்கள் கூறுகின்றன. (பி)

# சிறு விளம்பரம்


## விற்பனைக்கு

வைத்தியரின் சொந்தப் பாவனையில் நல்ல நிலையில் உள்ள TOYOTA HIACE விற்பனைக்கு உண்டு. (சகல ஆவணங்களுடனும்) தொடர்பு: T.PHONE -0777-589608

(7463)


## ஜனசக்தி கிராமத்தில் 20 வீடுகள்

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள, வட்டுக்கோட்டை கிழக்கு கிராம அலுவலர் பிரிவின் ஜன சக்தி கிராமத்தில் புதிதாக 20 வீடுகள் நிர்மாணிப்பதற்கென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் 30 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

அகில உலக 2வது இந்து மாநாட்டின் ஞாபகார்த்தத்தையொட்டி ஒதுக்கப்பட்டுள்ள மேற்படி நிதியைப் பயன்படுத்தி, தலா 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 20 வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-70)

## கூட்டம்

(கல்வயல்)

யாழ்.மாவட்ட சமுர்த்தி மன்றப பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.ஆரியகுளம் சந்திக்கு அருகாமையிலுள்ள புதிய உயர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

(உ-36)

## ஏ.எல்.பரீட்சை மார்ச்சில்

2004 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்துவதற்கு திட்டமிடப் பட்டிருந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையை மார்ச் மாதத்தில் நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரியவருகிறது.

ஏப்ரல் மாதத்திற்குமுன் அதாவது மார்ச் மாதத்தில் இப்பரீட்சையை நடத்துவதற்கான சகலவிதமான ஏற்பாடுகளையும் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுவருவதாகவும் தெரியவந்துள்ளது.(வ)

## 7,130குடும்பங்களுக்கு மீள்குடியமர்வு கொடுப்பனவு

(திருநெல்வேலி)

கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட பகுதியில் போர் நடவடிக்கைகளினால் பாதிப்படைந்த மக் களுக்கான மீள்குடியமர்வு நிதிக்கு விண்ணப்பித்த 7ஆயிரத்தி 130 குடும்பங்களுக்கு இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் எஸ்.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார்.

1997 ஆம் ஆண்டு சத்ஜெய இராணுவ நடவடிக்கை காரணமாக கரைச்சிப் பிரதேசத்தில் 32 கிராம சேவையாளர் பிரிவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தனர். இவர்கள் தற்போது மீளக்குடியேறி வருவதை யடுத்து மீள்குடியமர்த்தல் நிதிவழங்கப்படவுள்ளது. (உ-35,43)

## நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவு

(கொழும்பு)

கடந்த 2002 ஆம் ஆண்டு வாழைச்சேனைப் பிரதேசத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேற்று நஷ்டஈடுகள் வழங்கப் பட்டன..

வாழைச்சேனை அன்வர் தேசிய பாடசாலையில் வைத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவுகளை வழங்கினார்.

கடந்த 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆம் திகதி முஸ்லிம் - தமிழ் இனங்களுக்கிடையில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்வர்களுக்கு 4 கோடியே 53 லட்சம் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட்டது. (தி-61)

# விஷ்ணு ஆலயங்களில் நோற்கப்படும் சனி விரதத்தின் மகத்துவம்

வாழ்கையில் பல துன்பங்களை அனுபவித்து வரும் வேளையில், மனததை அமைதிப்படுத்தவும், இறைவனை சாந்தப்படுத்தவும் விரதமிருந்து பரிகாரங்களை மேற்கொள்வது இந்துக்களின் மரபு. இவ்வகையில் விரத நாட்களாக அமைந்த நட்சத்திரங்கள், திதிகள், வாரங்களிற் சில விசேடம் பெற்று இருப்பதற்கு கிரக ரீதியான சஞ்சாரமே காரணமாக உளளது என்று கூறுவர்.

### புரட்டாதி சனியின் சிறப்பு

கிரகங்களும் பூமியும் தத்தம் சுற்றுநிலைகளில் ஏற்படும் மாற்றங்களின் காரணமாக கிரகங்களின் செல்வாக்குச் சம்பந்தப்படும் ஒவ்வொரு நிலைகளிலும் வார விசேடம் காணப்படுவதை நோக்கக்கூடியதாகவுள்ளது.

## சங்கடந் தீர்ப்பான் சனிபகவான்

இவ்வகையில், புரட்டாதி மாதத்தில் சனி நட்பு நிலையில் இருந்தபடியால், சனிக்கிழமை அம்மாதத்திற்கு சிறப்பிற்குரியதாக விளங்குகின்றது.

மேலும், புரட்டாதி மாதத்திலே முதற் சனி தினத்திலே சூரியனுக்கும் சாயாதேவிக்கும் புத்திரனாக சனி பகவான் அவதரித்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வகையில், சனிக்கிழமை விரதம் விசேடமானதாக நோக்கப்படுகின்றது.

சனிபகவான் நவக்கிரகங்களுள் தனியிடம் பெற்றுத் திகழ்வதுடன், ஆயுள் காரகனாகவும் விளங்குகின்றார். இவருக்கு ''ஈஸ்வரன்'' என்ற பெயரை சிவன் கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. இதனால், சனி பகவான் சனீஸ்வரன் ஆனார்

சனிபகவானுக்கு ''மந்தன்'', ''சனச் சரன்'' என்ற பெயர்களும் உண்டு. சனிபகவானின் நான்கு கரங்களில் வலக்கைகள் வர, தான முத்திரையும், பாம்பும் கொண்டதாக இருப்பதுடன், இடது கைகளில், வில்லும், சூலமும் கொண்டு விளங்குகின்றார்.

ஆகமங்களில் சனீஸ்வரனுக்கு வாகனமாக காகம் கூறப்பட்டுள்ளது.

இவரது மனைவியின் பெயர் ஜ்யேஷ்டாதேவி சனிபகவானுக்குரிய தானியம் எள்ளு, கருநீல மலர் சனிபகவானுக்குரிய மலராகக் கூறப்படுகின்றது.

''சனியைப் போலக் கொடுப்பாருமில்லை, கெடுப்பாருமில்லை'' என்று கூறுவர். சனீஸ்வரன் நேர்மையானவர். அவர் அவரவருக்குரிய பலனை வழங்குபவர்.

### சனிபார்வைத் தீமை

சனிபகவானின் பார்வைக்கு உட்பட்ட பலர் துன்பப்பட்ட வரலாறுகள் பல உள. இவ்வகையில், நளன் சனிபகவானின் பார்வைக்கு உட்பட்ட போதும், அவனது நற்குண, நற்செயல்கள் காரணமாக அவனைப் பற்றமுடியாமல் இருந்தது.

இவ்வேளையில், ஒருநாள் நளன காலை ஒழுங்காக்க் கழுவாமல் செல்ல, அக்குறைகண்ட சனிபகவான நளனைப் பற்றியதால், அவன் நாடிழந்து, மனைவியைப் பிரிந்து பட்ட துன்பம் யாவரும் அறிந்ததே.

இவ்வகையில் நளன் தனது துன்பத்தை நீக்குவதற்காக தலயாத்திரையாக திருநள்ளாறு எனும் சிவத்தலத்திற்குச் சென்று வழிபாடாற்ற சனியின் பார்வையில் இருந்து விடுபட்டதாக வரலாறு கூறுகின்றது. இத்தலத்திலுள்ள சனி பகவான் மிகவும் பிரசித்தி பெற்றவர்.

இவ்வாறாகச் சனிபகவானின் பார்வைக்கு உட்பட்டுத் துன்பப் படுபவர்கள் ஏற்ற வழிபாடுகளையும், பரிகாரங்களையும், மனத்தை ஒருநிலைப்படுத்தி ஆற்றும்போது உரிய பலன் கிடைக்கும் என்பது கண்கூடாகும்.

''சனிநீராடு'' என்று ஒளவையார் கூறியதற்கு ஏற்ப ஒவ்வொரு சனிக் கிழமைகளிலும் எண்ணெய் தேய்த்து நீராடி சனிபகவானை நோக்கி விர



தமிருப்பது சிறப்பானது. மாதச் சனிக் கிழமைகளில் விரதமிருக்கமுடியாதவர்கள் புரட்டாதிமாதச் சனிக்கிழமைகளில் விரதமிருக்கலாம்.

### பயனைவெல்லும் சனி

சனீஸ்வரன் சிறந்த சிவ பக்தன் என்பதனால், சிவாலயங்களிலுள்ள சனி பகவானை விசேடமாக வழிபடலாம். மேலும் சனிக்கு அதிபதி விஷ்ணு ஆதலால், விஷ்ணு ஆலயங்களில் விசேட வழிபாடுகள் மேற்கொள்வதும் உரிய பலனைத்தரும். சனிக்கிழமைகளில் சனீஸ்வர பகவானுக்குக் கறுப்புப் பட்டைச்

குகதாசசர்மா சிவகுமார்

சாத்துதலும், எள்ளுச்சாதம், நிவேதனம் செய்தலும், கருநீல மலர்களால் அருச்சனை செய்தலும், கறுப்புத் துணியில் எள்ளுப் பொட்டலம் செய்து மண்சட்டியில் நல்லெண்ணெய் விட்டு எரித்தலும் எமக்கு நற்பலனைத் தந்து நிம்மதியான வாழ்வைத் தரும் என்பது திண்ணமாகும்.

இவ்வகையில், சனிபகவானால் ஏற்படக்கூடிய சகல தோஷங்களுக்கும் மேலே கூறப்பட்ட பரிகாரங்களை மனத்துாய்மையோடு ஒருநிலைப்படுத்தி ஏற்றுக் கடைப் பிடிப்பதன் மூலம், சனியினால் ஏற்பட்ட சங்கடங்கள் தீர்ந்து, அமைதி வாழ்வைப் பெற்று உய்ய முடியும்.

## சனீஸ்வரன் தோத்திரம்

இன்று புரட்டாதி மாத சனீஸ்வர விரத ஆரம்ப தினத்தையொட்டி இத் தோத்திரம் பிரசுரமாகின்றது.

''காகத் வஜாய வித்மஹே
கட்க ஹஸ்தாய தீமஹி
தந்தோ மந்த பிரசோதயாத்''

''சனீஸ் வராய சாந்தாய
ஸர்வா மிஷ்ட ப்ரதாயினே
ஸரண்யாய ஸரண்யாய
ஸர்வே ஸாய நமோநம''

''நீலாஞ்சன ஸமா பாஸம்
ரவி புத்ரம் யமாக்ரஜம்
சாயா மார்த்தாண்ட ஸம்பூதம்
தன்ன மாமி சனைஸ்வரம்''

# விளையாட்டுச் செய்திகள்

## கிராமப்புறத்தில் கிரிக்கெட்டை தரமுயர்த்த நடவடிக்கை

தேசிய மட்டத்தில் சிறந்த கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களை உருவாக்க எண்ணியுள்ளதாக இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இது தவிர, கிராமப்புறங்களில் கிரிக்கெட் விளையாட்டை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் உபதலைவர் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாரம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையில் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தற்போது சிறந்த நிலையில் உள்ள தேசிய கிரிக்கெட் பயிற்றுநர்களை இனம்காண வேண்டியுள்ளதாகவும், அரவிந்த டி சில்வா இங்கு சுட்டிக் காட்டினார். (உ-68)

## பாக். பாதுகாப்பு நிலை குறித்து தென்னாபிரிக்கா திருப்தி

பாகிஸ்தானில் பாதுகாப்பு நிலைமைகள் திருப்திகரமாக இருப்பதாக தென்னாபிரிக்க விசேட பாதுகாப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவான சூழ்நிலை பாகிஸ்தானில் இருக்கின்றதா எனக் கண்டறிய அங்கு சென்ற பாதுகாப்புக் குழுவினரே, பாதுகாப்பு நிலைமைகள் திருப்திகரமாக உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

எனினும், பெஸ்சவர் மற்றும் கராயச்சியில் நடைபெறவுள்ள போட்டிகளில் தென்னாபிரிக்கா கலந்து கொள்ளும் இறுதி முடிவை தென்னாபிரிக்காவின் ஐக்கிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையே எடுக்கவேண்டும் என பாகிஸ்தான் சென்றுள்ள பாதுகாப்புக் குழு தெரிவித்திருக்கின்றது.

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

## ஆபிரிக்க விளையாட்டுப் போட்டி

## வெற்றிவாகை சூடிவரும் நைஜீரிய வீரருக்குப் பணப்பரிசு

அடுத்தமாதம் இடம்பெறவிருக்கின்ற ஆபிரிக்க விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்லும் நைஜீரிய வீர, வீராங்கனைகளுக்குப் பணப்பரிசுகளை வழங்க எண்ணியுள்ளதாக நைஜீரிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

தங்கப்பதக்கத்தை வெல்லும் வீரர் அல்லது வீராங்கனைக்கு ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களைப் பணப்பரிசாக வழங்குவதற்கு நைஜரிய அரசாங்கம் எண்ணியுள்ளதாக அந்நாட்டின் விளையாட்டுத்துறை அமைச்சர் முஸா முகமட் தெரிவித்துள்ளார்.

நைஜீரிய நாட்டின் விளையாட்டு வீர, வீராங்கனைகளை ஊக்குவிக்கும் நோக்கிலேயே இவ்வளவு பெரும் தொகைப் பணப்பரிசு வழங்கப்படவுள்ளதாகவும் விளையாட்டுத் துறை அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடுத்தமாதம் 4ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை ஆபிரிக்க விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-68)

## கால்பந்தாட்ட வீரர் பேலே ரஷ்யாவுக்குச் சுற்றுப்பயணம்

உலகப்புகழ்பெற்ற கால்பந்தாட்ட வீரர் பேலே, தற்போது ரஷ்யாவிற்குச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ரஷ்ய இளம் கால்பந்தாட்ட வீரர்களை ஊக்குவிக்கும் முகமாகவே பேலேயின் விஜயம் அமைந்துள்ளது.

இவரது ரஷ்ய விஜயமானது அந்நாட்டில் கால்பந்தாட்ட ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ரஷ்ய விஜயத்தின்போது, தற்போது கால்பந்தாட்ட உலகில் பரபரப்பாகப் பேசப்படும் கோடிஷ் வரரும், வர்த்தகருமான றோசம் அம்றோவிச் பற்றிக் கருத்து வெளியிட்டுள்ள பேலே, இங்கிலாந்தின் செல்சே கழகத்தை விலைக்கு வாங்கியுள்ள அம்றோவிச் இதுவரை அதற்காக 175 மில்லியனுக்கும் அதிகமான அமெரிக்க டொலர்களைச் செலவிட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

அதிசிறந்த வீரர்களை ஒரு கழகத்தினுள் இணைத்துள்ள போதும் செல்சே கழகத்தினால் கிண்ணங்களை வென்றெடுக்கமுடியாது உள்ளமையைப் பேலே குறிப்பிட்டுப் பேசியுள்ளார். (உ-68)

### சிறப்புரிமைகளை அகௌரவப்படுத்துவதாக

# வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர்மீது

# ரிசாத் எம்.பி. குற்றச்சாட்டு

(புத்தளம்)

வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், தமது சிறப்புரிமைகளை அகௌரவப்படுத்தும் வகையில் செயற்படுவது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் முறையிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுக்காது போனால், அரசுக்கு வழங்கும் ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாகவும் கூறியுள்ளார்.

நேற்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்துள்ள ரிசாத் பதியுதீன், வன்னிமாவட்ட மக்களின் வாக்கினால் பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி என்ற வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை நான் மேற்கொள்வதைத் தடுப்பது சிறப்புரிமையை மீறும் செயல் என்று சுட்டிக்காட்டியுள்ளதுடன்,

கடந்த ஒன்றரை வருடமாக தனது மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியாமல் விலங கிடப்பட்டிருந்ததாகவும் கூறியுள்ளார்.

தற்போது தம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பணிகளை முடக்கும் வகையில் வன்னிப் புனர்வாழ்வு அமைச்சு பல்வேறு தடங்கல்களை ஏற்படுத்துவதானது, சர்வாதிகாரப் போக்கையே காட்டுகிறது. இதனை இனிமேலும் பொறுததுக்கொள்ள முடியாது.

இது குறித்து ஐக்கியதேசிய முன்னணி அரசின் தலைவர் என்ற வகையில் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சுய கௌரவத்தையும், பாராளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையையும் மீறும் இச்செயல குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமையும் ரிசாத பதியுதீன் சந்தித்துப் பேசியுள்ளார்.

(உ-15)

## கூட்டம்

(நவாலி)

பாலர் கல்விக் கழகத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கழகக் காரியாலயத்தில் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(உ-102)

# கடனில் மூழ்கியுள்ள திக்கம் வடிசாலை

(யாழ்ப்பாணம்)

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள்காரணமாகத் திக்கம் வடிசாலையின் பெயரில் ஒரு கோடியே 90 இலட்சம் ரூபா கடன் இருப்பதாகவும், இதன்காரணமாக வடிசாலையின் அபிவிருத்திப் பணிகள் தடைப்பட்டுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபைத்தலைவர் பொ.சிவபாதம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் புனாவாழ்வு புனரமைப்பு அமைச்சுப் பொறுப்பில் இருந்த கட்சி உறுப்பினர் ஒருவர் இத் தொழிற்சாலையின் பெயரால் மேற்படி தொகையைக் கடனாகப் பெற்றுக் கள் கொள்வனவு செய்திருந்தார்.

இக் கள்ளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வடிசாராய விற்பனை தொடர்பான கணக்கு வழக்குகள் எதுவும் பேணப்படவில்லை.

அத்துடன், இந்த விற்பனையால் வந்த வருமானத்தை அவர் தனது சுய தேவைகளுக்காகப் பயன்படுத்தியுள்ளார். இதன் காரணமாக மேற்படி கடன்சுமை ஏற்பட்டுள்ளது என்று அவா மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

# முன்பள்ளிச் சிறுவர்களிடையே மாகாண மட்டப்போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டித் தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆதரவுடன் வடக்கு -கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், முன்பள்ளிச் சிறுவர்களிடையே ஆடல், பாடல், உடற்பயிற்சி, இசையும்- அசைவும் ஆகிய போட்டிகளை நடததவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டும் முன்பள்ளி சிறார்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது.

(உ)

# வலி.தெற்குப் பிரதேசத்தில் 14 நுண்கருத்திட்டங்கள்

### 7 இலட்சத்து 12ஆயிரத்து 750 ரூபா ஒதுக்கு

(சுன்னாகம்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள 14 நுண் கருத்திட்டங்களுக்காக அரசின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து 7இலட்சத்து 12ஆயிரத்து 750 ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அவற்றின் விபரம் வருமாறு:-

* கலைமகள் சனசமூக நிலையம்-48,500
* இணுவில் கிழக்குப் பாலர் பாடசாலை-100,000
* உடுவில் நாச்சியம்மாள் சனசமூக நிலையம்-97,000
* அறிவொளி சனசமூக நிலையம் (திருத்தம்)-72,500
* அறிவொளி சனசமூக நிலையம் (தளபாடம்)-24,250
* மத்தாவோடை சனசமூக நிலையம்-24,250
* மயிலங்காடு சனசமூக நிலையம்-24,250
* சுன்னாகம் காந்தரூபன் சனசமூக நிலையம்-24,250
* குப்பிளான் குறிஞ்சிக்குமரன் சனசமூக நிலையம்-24,250
* ஏழாலை வடக்கு சனசமூக நிலையம்-24,250
* திடற்புலம் ஒளிநிலா சனசமூக நிலையம்-24,250
* இணுவில் சிவகாமி சனசமூக நிலையம்-50,000
* சுன்னாகம் முத்தமிழ் சனசமூக நிலையம்-1,50,000
* அறிஞர் ஐயனார் சனசமூக நிலையம்-25,000.

(உ-104)

## கொடியேற்றம்

(ஈச்சமோட்டை)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லி புரநாதர் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் எதிர்வரும் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(உ-59)

### பனை அபிவிருத்திச் சபையின்,

# வெள்ளி விழாவைக் கொண்டாட விரிவான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் வெள்ளிவிழா நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளன.

எதிர்வரும் 21, 22, 23ஆம் திகதிகளில் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள இவ் வெள்ளிவிழா நிகழ்வுகளின் ஓரங்கமாக பனம் உற்பத்திப் பொருட்களின் கணகாட்சி இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

இதேவேளை, வெள்ளி விழாவையொட்டிப் பாடசாலை மாணவர்களிடையே மாவட்ட மட்டப் போட்டிகளும நடாத்தப்படவுள்ளன.

(உ-04)

### சட்டவிரோதமான முறையில்

# இத்தாலி செல்ல முயன்ற 7இலங்கையரும் மனுத்தாக்கல்

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலி செல்ல முற்பட்டவேளை கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் உள்ள 7 இலங்கையர்களும் தம்மை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி, மேல் முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

தங்காலை குடா வெல்லப்பகுதியில் வைத்துக் கடந்த பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி மீன்பிடிப்படகுகள் மூலம் இத்தாலி செல்ல முற்படுகையிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரையும் தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட தங்காலை நீதவான் இவர்களுக்கான பிணை மனுவை நிராகரித்தார்.

இவர்களுடன் கைதுசெய்யப்பட்ட மேலும் 27பேர் அண்மையில் மேல்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல்செய்த மனுவை அடுத்து, அவர்களைப் பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்தே, இவர்களும் மேல்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

(தி-60)

## ச.ச.நிலையங்களின் சங்கமம்

(ஏழாலை)

வலிகாமம் கோட்ட சனசமூக நிலையங்களின் சங்கமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(உ-12)

# தியாகி திலீபனின் நினைவகலா நாட்கள்




### ஞாலத்தில் நிலைக்கும் சீலம்!

*வேள்வித் தீயில் விழுந்தது உயிர்ப் பூ*
*வெற்றிக்கு வித்தாய் ஆனது அப் பூ*
*பாரினில் இவ் ஈகையைப் போலவே*
*பார்த் தறியோம் யாம் கேட்டறியோமே!*

*தனக்கு மிஞ்சியே தானமென்று முன்னோர்*
*சொன்ன வார்த்தையை மாற்றியே இங்கு*
*தன்னையே கொடுக்கும் உயிர்க்கொடை தனையே*
*தரணியில் வேறெங்கும் கண்டறியோமே!*

*தமிழரின் விடிவுக்காய் தன்னையே வித்தாக்கி*
*தரணியில் உயர்ந்திட்ட திலீபனே-உன்னீகை*
*காலத்தை வென்று நிலைத்திடுமே என்றும்*
*ஞாலத்தில் நிலைக்கும் நின் சீலம்*

குகதாச சர்மா-சிவகுமார் சுன்னாகம்

### வீதி விபத்துக்களைத் தவிர்க்க

# தமிழீழக் காவல்துறை கடும் பிரயத்தனம்

(கிளிநொச்சி)

வீதி விபத்துக்களைத் தவிர்க்குமுகமாக தமிழீழக் காவல்துறையின் நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் துண்டுப்பிரசுரம் ஒன்று வெளிடப்பட்டுள்ளது.

அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மைக் காலங்களில் எமது தாயகப் பிரதேசங்களில் வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இதன் காரணமாகப் பெருமளவான உயிரிழப்புக்களும், பொருள் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

ஒரு மனித உயிர் மிகுந்த பெறுமதிவாய்ந்தது. மீளப்பெற முடியாதது. அதிகரித்து வரும் வீதிவிபத்துக்களை ஆராய்ந்து வரும்போது சில காரணங்களை இனங்காணக் கூடியவாறு உள்ளது.

வாகனங்களை ஓட்டிச்செல்லும் போது அதன் சாரதிகள் எதிரே வரும் வாகனங்களையும் பாதசாரிகளையும் கருத்தில்கொள்ளாது செயற்படுவதன் காரணமாக இவ் விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன.

தொடர்ச்சியாக நித்திரை இன்றி வாகனங்களைச் செலுத்துதல், ஏனைய வாகனங்களை முந்திச் செல்வதற்காகத் தமது வாகனங்களை வேகமாகச் செலுத்துதல் போன்ற நடவடிக்கைகளாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இவ்வாறான விபத்துக்களைத் தவிர்த்துப் பெறுமதிமிக்க உயிர்களைக் காக்கும் பொருட்டு சகலரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவிக கப்பட்டுள்ளது.

(உ-64,08)

# சம்பள முரண்பாடுகளை நீக்க 330 கோடி ரூபா தேவை

### சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் நிலவும் சம்பள ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு 330 கோடிரூபா தேவைப்படுவதாக சுகாதாரஅமைச்சர் பீ.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

இந்நிதி நெருக்கடிகளுக்குத் தீர்வுகாண, திறைசேரியின் உதவியையே நாடவேண்டியிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர்,

அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தயாராகி வருகின்றதாகவும்,

எனவே, நோயாளர்கள் எதிர் கொள்ளும் சிரமங்களைக் கருதி யாவது பகிஷ்கரிப்பைக் கைவிட வேண்டும் என்றும் கேட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில வெளிநோயாளர் பிரிவும், அவசர சிகிச்சைகளும் முப்படைகளின் துணையுடன் வழமை போன்று நடைபெறுவதாக அதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(உ-61,10)

# நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது

## ஜனாதிபதிக்குப் பிரதமர் பதில் கடிதம்

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத்தளத்திற்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குற்றஞ்சாட்டி ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்த கடிதத்திற்கு பிரதமர் பதில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில், நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களை ஊடகங்களில் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. அவ்வாறு பகிரங்கப்படுத்தினால் அது நாட்டின் பாதுகாப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும். இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். 2001 ஆம் ஆண்டுவரை ஜனாதிபதி சந்திரிகா பாதுகாப்பு மற்றும் நதியமைச்சர் என்ற நிலையில் உச்சகட்ட அதிகாரங்களைக் கொண்டிருந்தார் இந்தக்காலப் பகுதியில் மாங்குளம், கிளிநொச்சி, பூநகரி, முல்லைததீவு மற்றும் வன்னிப் பிராந்தியம் உட்பட பல பிரதேசங்கள் புலிகளிடம் இழக்கப்பட்டன. இதில் பெருமளவு பின்னடைவுக்ளை இராணுவம் கண்டிருந்தது. 1995 இல் திருகோணமலையின் சம்பூர் பகுதியிலிருந்து இராணுவம் வாபஸ் பெறப்பட்டது. இக்காலப் பகுதியில்தான் புலிகள் கனரக ஆயுதங்களை திருகோண மலைக்கு நகர்த்தினர்.

ஆனையிறவுத் தளம் புலிகளிடம் இழக்கப்பட்டது உட்பட கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதல் வரை ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்திலேயே இடம்பெற்றது.

இராணுவ தந்திரோபாயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அரசியல் தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தமையே படையினர் பெரும் பின்னடைவுகளை சந்திக்க நேரிட்டது.

சண்டைகளின்போது உயிரிழந்த இராணுவ வீரர்களின் எண்ணிக்கையை மறைப்பதற்காக நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்களை ஏற்காது விட்டமையும் ஜனாதிபதியின் காலத்தில்தான் நடந்தது.

பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களை கையாள்வதற்கு அரசாங்கம் சகலவிதமான நடவடிக்கைகளையும் எடுத்திருப்பது குறித்து ஜனாதிபதி பாராட்டுத் தெரிவிப்பார் என நம்புகிறேன். இராணுவத்தினர் சர்வதேச நாடுகளிடமிருந்து பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் தேசிய பந்தோபஸ்து நடவடிக்கைகளை ஒன்றிணைப்பதன் மூலம் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும். நாட்டு மக்கள் தற்போது சமாதான சூழ்நிலையின் பயன்பாட்டை அனுபவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்களில் வீண்விவாதங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே தற்போதைய தேவையாகும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமரின் இப்பதில் கடிதம் முற்றிலும் தவறானது எனவும் விடயத்தை திசைதிருப்பும் நோக்கில் அமைந்துள்ளது என்றும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக ஜனாதிபதி விரைவில் பிரதமருக்கு மீண்டுமொரு கடிதம் எழுதுவார் என்றும் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.(த)

## மருமகள் தாக்கி முதியவர் மரணம்

(கொழும்பு)

10 நாட்களுக்கு முன் மருமகளால் தாக்கப்பட்ட நிட்டம்புவவை சேர்ந்த 80 வயது முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மேற்படி பெண்ணை நிட்டம்புவ பொலிஸார் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்செய்து பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தபோதும், வயோதிபர் மரணமானதையடுத்து கொலைக்குற்றத்தின்பேரில் மீண்டும் நிட்டம்புவ பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(உ-6)

## ஆஸி.தூதுவர் டேவிட் பின்ஸ் அடுத்த மாதம் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

அவுஸ்திரேலியாவின் இலங்கைக்கான தூதுவர் டேவிட் பின்ஸ் தலைமையிலான அவுஸ்திரேலியா செனற்சபை உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ்.குடாநாட்டு நிலைமைகளை நேரில் அறியும் வகையில் இங்கு வருகைதரும் இக்குழ அன்றைய தினம் யாழ்.செயலகத்தில் செயலக அதிகாரிகளுடன் முக்கிய சந்திப்பு ஒன்றையும் நடத்தவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, குடாநாட்டிலுள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து மக்களின் நிலைப்பாடு தொடர்பில் கேட்டறியத் திட்டமிட்டுள்ள இக்குழு, குடாநாட்டின் பல்வேறு பாகங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளது.(உ-4)

**தேர்தல் ஆணைக்குழுவை நியமித்தல்**

## மனுமீதான விசாரணை அடுத்தமாதம் ஆரம்பம்

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களை நியமிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட வேண்டுமெனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மக்கள் சட்ட நலன்புரி மனறத்தினால் தாக்கல் செய்யப்பட்ட இம்மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் சர்வ நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இம்மனு 17 வது அரசியல் யாப்பு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவி ஸ்ரீயானி திலகவர்த்தன தலைமையில் அடுத்தமாதம் 6ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

(தி-60)

## மக்கள் ஆதங்கத்தை உலகுக்கு அறிவிப்பதே பொங்குதமிழ்

### ஏற்பாட்டுக் குழுவின் விளக்கம்

(வவுனியா)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறபபட்டிருப்பது போல் தமிழ்மக்களின் வாழ்க்கையில் இயல்பு நிலை ஏற்படுத்தப்படவில்லை. அதனால் அவர்கள் விரக்தியும் நம்பிக்கையீனமும் அடைந்துள்ளார்கள். இதனால் அவர்கள் போரைப்பற்றி பேசிக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு வவுனியா பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் விடுத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பல்கலை வளாக மாணவர் சங்கம், கல்வியியல் கல்லூரி தமிழ் மாணவர் சங்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களுடன் வவுனியா மக்கள் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட பொங்கு தமிழ் ஏற்பாட்டுக்குழு பொதுமக்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தியிருப்பதுடன் அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளனர். இந்தசமயங்களில் '' நாங்கள் எங்கள் வீடுகளுக்குப் போவதற்காக படையினர் தங்கள் வீடுகளுக்கு போகட்டும்'' என்று மக்கள் கூறியிருக்கிறார்கள் என்று அந்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்களை சர்வதேச சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் எமது சிங்கள சகோதரர்களுக்கும் ஒரு பதாகையின் கீழ் இருந்து ஒரே குரலில் அறிவிப்பதற்காகவே பொங்குதமிழ் நிகழ்வு நடத்தப்படவிருக்கிறது என்று அவர்கள் விளக்கியுள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன் கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் மாலை 3.30 மணிக்கு வவுனியா மாவட்ட பொங்குதமிழ் நிகழ்வு இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(பி)

## 2300 வருடங்கள் பழமைவாய்ந்த தமிழர் குடியிருப்பு பூநகரியில் கண்டுபிடிப்பு

கடந்த ஒருவார காலமாக கலாநிதி புஸ்பரட்ணம் தலைமையில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள் 18பேர் கொண்ட குழு தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது.

இந்த ஆய்வின் ஒருபகுதியாக பூநகரி வட்டாரத்திலுள்ள கல்முனைக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது 2ஆயிரத்து 300வருடங்களுக்கு முற்பட்டவையென அறுதியிட்டுக் கூறத்தக்க தமிழரின் குடியிருப்புப் பகுதி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

அகழ்வுக் குழியில் 4வேறுபட்ட மண் அடுக்குகளில் இருந்து பல்வேறுபட்ட தொல்லியல் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மண்ணின் மேற்படையில் பண்டைய பெண்தெய்வ உருவம் பொறித்த தமிழ் நாணயங்களும்,வேறுபட்ட வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்டங்களும் அக்கால மக்கள் பயன்படுத்திய இரும்புக் கருவிகளும்,மணிகள்,கைவளையல்கள் போன்ற பல சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வகை நாணயங்களின் தோற்றகாலம் கி.மு. 3ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாக நாணயவியல் அறிஞர்களால் வரையறை செய்யப்பட்டிருப்பதால் இந் நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட கீழ்ப்படையிலுள்ள எச்சங்கள் 2ஆயிரத்து 300 வருடங்களுக்கு முற்பட்டதெனகருத இடமுண்டு.அவற்றில் ஒரு நாணயும் அகழ்வாய்வு செய்யப்பட்ட குழிக்குள் இருந்து அகழ்வின் போது கண்டெடுக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏனைய 3 கலாசார மண்படைகளிலிருந்து பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய திராவிட மக்களின் கறுப்பு, சிவப்பு நிற மட்பாண்டங்களும், நரைநிற,தனிக்கறுப்பு,சிவப்பு நிறத்தாலான சட்டிகள்,வட்டில்கள், பானைகள்,குவளைகள்,தட்டில்கள் போன்ற பொருட்களும் அக்கால மக்கள் பயன்படுத்திய இரும்புக் கருவிகளும் (கொழுகத்தி,ஊசி, மீன்பிடி ஊசி),சங்கு,சிப்பி போன்ற பொருட்களும் தமிழ் நாடு ஆதிச்சிய நல்லூர் பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய வேல் வடிவங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இதில் சிறப்பாக குறிப்பிடத்தக்கது பல மட்பாண்டங்களில் குறியீடுகளுடன் 2ஆயிரத்து 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய தமிழ் எழுத்துக்கள் கிடைக்கப்பட்டமையாகும். அவற்றுள் எழுதப்பட்ட பெயர்களுள் சில தமிழில் ஆண்மகனைக் குறிக்கும் ''அன்'' என்ற விகுதியுடன் முடி வடைவதால் இங்கு வாழ்ந்த மக்கள் தமிழ்மொழி பேசிய மக்கள் என்பது உறுதியா கின்றது.

இந்த ஆய்வின் போது கண்டு பிடிக்கப்பட்ட மிகமுக்கியமான மற்றுமொரு சான்று நான்காவது மண்படையில்,அதாவது இயற்கை மண்ணை அடுத்து(NATURAL SOIAL), குவாட்ஸ்(QUARTZ) எனப்படும் பளிங்கு போன்ற கல்லினால் வடிவமைக்கப்பட்ட கல்லாயுதம் இவ்வாறான கற்கருவிகள் பூநகரியிலுள்ள மண்ணித்தலை,வெட்டுக்காடு, மண்டைக்கல்லாறு போன்ற இடங்களிலும் மாதோட்டம், பலாங்கொடை போன்ற இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.இவற்றின் காலம் கி.மு 28ஆயிரம் ஆண்டுகள் எனவும் இப்பண்பாட்டுக்குரியவர் மகாவம்சத்தில் வரும்''நாக இன மக்கள்'' எனவும் சிரான் தெரணியகல என்ற தொல்லியல் அறிஞரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால்,தென்னிந்தியாவில் உணவுற்பத்தியில் ஈடுபட்ட செம்புக்கால,பெருங்கற்கால, புதியகற்கால பண்பாட்டுக்குரிய மக்களும் இவ்வாறான கருவிகளை பயன்படுத்தியதற்கு சான்றுகள் இருப்பதனால் கல்முனையில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவிகள் எப்பண்பாட்டுக்குரியதென திட்டவட்டமாகத் தற்போது கூறமுடியாதுள்ளது. ஆயினும் அகழ்வு ஆய்வின் போது முதல்முதலாக இப்பிரதேசத்தில் இக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது தமிழ்ப் பிரதேசத்தில் தொன்மை பற்றிய ஆய்வில் ஒருமுக்கிய திருப்பமென கூறலாம்.

தற்போது அகழ்வு செய்யப்பட்ட இடத்திற்கு மேற்கே மேலும் இரு இடங்களில் பண்டைய குடியிருப்புகளுக்குரிய சான்றுகள்,தடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால் அவ் இடங்களும் மழைகாலத்திற்கு முன் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு இவ் ஆய்வின் முக்கியத்துவம் தொடர்பான அறிக்கை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும் என இவ் ஆய்விற்கு தலைமை தாங்கிச் சென்ற கலாநிதி ப.புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

**கைத்தொழில் கண்காட்சி**

## இட ஒதுக்கீடு தொடர்பில் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண தொழில் துறைத் திணைக்களமும் யாழ். மாவட்ட சிறிய நடுத்தர கைத்தொழில சம்மேளனமும் இணைந்து நடாத்தும் வர்த்தகக் கண்காட்சி இம்மாதம் 27,28,29 ஆம் திகதிகளில் யாழ்.வைத்தீஸ்வரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் உள்ளூர்,வெளியூர் கைத்தொழில் நிறுவணங்களுக்கான இடஒதுக்கீடு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுமாதலால், இடநெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ளும் முகமாக இதில் பங்குபற்ற விரும்பும் கைத்தொழில் வர்த்தக நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான இடஒதுக்கீடுகளை ம்ுன் கூட்டியே பதிவு செய்வதற்கு இல.165, மானிப்பாய் வீதியல் உள்ள யாழ்வணிகர் கழகத்துடன் தொலைபேசி, தொலைநகல் இல.021-222 2367 ஈமெயில் jaffna-c-c@eudoramail.com ஆகியவற்றுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுள்ளது. (உ)

## 8 நுண்கருத் திட்டங்களுக்கு டக்ளஸ் நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

தீவகம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் வேலணைப் பகுதியில் 8 நுண்கருத்திட்டங்களை மேற்கொளவதற்கென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தனது பன்முகப்படுததப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியலிருந்து 5 இலட்சத்து 9 ஆயிரத்து 250 ருபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

மேற்படி நிதியின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள நுண்கருத்திட்டங்களின் விபரம் வருமாறு:-

★ அம்பிகை நகர் மீன்சந்தைக் கட்ட வேலை - 38,800

★ புங்குடுதீவு நிலாஜோதி சன சமூக நிலையம் புனரமைப்பு - 48,500

★வேலணை நாவலர் சனசமூக நிலைய முன்பள்ளிக்குத் தளபாடம் கொள்வனவு - 29,100

★வேலணை தேவி கோட்டம் சனசமூக நிலைய முன்பள்ளிக்கு தளபாடம் கொள்வனவு - 29,100

★அம்பிகை நகருக்கு மின்சாரம் வழங்கல் - 1,94,000

★வேலணை ஸ்ரீகாளிகா பரமேஸ்வரி தேவஸ்தானம் புனரமைப்பு - 72,750

★வேலணை ஆதிஞான வைரவர் கோவில் புனரமைப்பு - 48,500

★ நயினாதீவு ஸ்ரீ மலையின் நாயனார் ஆலயம் புனரமைப்பு - 48,500 (உ-18)

## இன்று ஒரு தகவல்

# தலைகீழ் சிந்தனை

சிந்தனையில் 3வகையான சிந்தனைகள் உள்ளன வாம். அதாவது நேரடியாகச் சிந்திப்பது ஒன்று. எதிர்மறையாகச் சிந்திப்பது ஒன்று. இது பொதுவாக நமக்குத் தெரிந்திருக்கும். ஆனால் இவற்றையும் தாண்டி மூன்றாவதாக ஒன்றும் இருக்கின்றதாம். அதுதான் தலைகீழாகச் சிந்திப்பது.

இப்படித் தலைகீழாகச் சிந்திப்பதனாலும் சில நல்ல செயற்பாடுகள் நடந்திருக்கின்றதாம் என்று ஒருவர் கூறினார். அதற்கு நூலில் படித்த ஒரு சம்பவத்தையும் உதாரணமாகக் கூறினார். என்னவென்றால் ஐஸ்கிறீம் சாப்பிடுகின்றோம் அல்லவா? அந்த ஐஸ்கிறீம் கண்டுபிடிக்கப்பட்ட சந்தர்ப்பம்.

ஜப்பானில் உள்ள ஒரு பெரிய கம்பனி நிறைய ஐஸ்கிறீம் தயார் செய்து அனுப்புகின்றது. நிறைய விற்பனையாகின்றது. ஆனால் அவர்களுக்குள்ள பிரச்சினை என்னவென்றால், ஐஸ்கிறீம் வைப்பதற்குரிய கண்ணாடிப்பாத்திரம் இருக்கின்றதல்லவா? அவற்றையும் அதிகமாகத் தயாரிக்கவேண்டியிருந்தது! விற்பனை செய்வதற்கும் அது தேவைப்படுகின்றது! கடைக்கு வருபவர்களுக்குப் பரிமாறுவதற்கும் தேவைப்படுகின்றது.

இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் அந்தக் கண்ணாடிக் கப்களைப் பாதுகாக்க முடியவில்லை. நிறைய உடைந்து போய்விடுகின்றது. வெளியில் அனுப்பும் போது நிறையச் சேதாரம் ஆகிவிடுகின்றது. சேதாரம் ஆவதோடு இருந்தால் பரவாயில்லை! இந்தக் கண்ணாடிக் கப்களில் சாப்பிடுபவர்கள் சாப்பிட்டுவிட்டுப் போன பின்பு திரும்ப அதைக் கழுவி வைக்க வேண்டும். அப்படிச் சரியாகக் கழுவி வைக்கவில்லை என்றும் நிறையப் புகார்கள் வரத்தொடங்கிவிட்டன. இதனால் ஐஸ்கிறீம் விற்பனையில் ஒரு தேக்கநிலை உருவாவது போல் இருந்தது.

உடனே அந்த நிறுவனத்தின் நிர்வாகிகளும் ஊழியர்களும் எப்படி இந்தப் பிரச்சினையை நாம் சமாளிப்பது என்று யோசனை செய்தனராம். கண்ணாடிக் கப்புக்கு மாற்றாக எதையாவது தயாரிக்கலாமா என்று யோசித்தனராம். ஒருவர் கூறினார் ''பிளாஸ்ரிக்கினால் தயாரிக்கலாம். சாப்பிட்டவுடன் தூக்கியெறிந்துவிட்டுப் போய்விடலாம் அல்லவா!'' என்று இன்னும் ஒருவர் கூறினார் ''அட்டைப் பெட்டியில் தயாரிக்கலாம'' என்று இவர்களில் ஒருவர் திடீரென்று கூறினார். ''எனக்கு ஒரு யோசனை தோன்றுகின்றது''என்றாராம்! என்ன? என்றனர் மற்றோர். அவரும்''ஒன்றுமில்லை எந்தக்கப்பில் அந்த ஐஸ்கிறீமை வைத்துக்கொடுக்கின்றோமோ, அந்தக் கப்பையும் சேர்த்து உண்பது போல் தயாரித்தால் அதாவது அதையும் ஒரு உணவுப்பொருளாக மாற்றினால் ஐஸ்கிறீம் உண்பவர்கள் கப்பையும் சேர்த்து உண்பார்கள். பிரச்சினை அத்தோடு தீர்ந்துபோய்விடும்!'' என்றார்.

எல்லோருக்கும் அந்த யோசனை சிறப்பாகத் தெரிந்தது. அந்த ஐஸ்கிறீம் தான் இப்போது நாம் சாப்பிடும் கோண் ஐஸ்கிறீம். இப்படித் தலைகீழாகச் சிந்திப்பதால் கூட நல்ல பலன்கள் கிடைத்துவிடும்.

இதேபோல் இன்னுமொன்றையும் கூறுவர். ட்ரான் சிஸ்ரர் கண்டு பிடிக்கப்பட்டசந்தர்ப்பம். கொலண்டில் உள்ள ஒரு நிறுவனத்தில் சிறிய வானொலிகளைத் தயாரித்தனர். பெரிய வானொலிகளுக்கு மாற்றாக இதனைக் கண்டுபிடித்தனர். அதற்குக் கையடக்க வானொலி என்று பெயரும் வைத்தனர்.

இதனைச் சட்டைப்பைகளில் வைத்துக்கொள்ளக் கூடியவாறு தயாரித்து விற்பனைக்கு விட்டனர். ஆனால் இவை விற்பனையாகவில்லை. கோடிக்கணக்கான வானொலிகளை உருவாக்கியாயிற்று. விற்பனையாகவில்லை! ஏன் இவை விற்பனையாகவில்லை என்று யோசித்துப் பார்த்தால் கையடக்க வானொலி என்று கூறினார்களே தவிர சட்டைப்பைகளில் வைக்கக் கூடிய அளவு இல்லை. அதனை விடப்பெரிதாக இருந்தது. இதனால் பலரும் வாங்கவில்லை. என்ன செய்யலாம் என்று யோசித்தனர்.

அப்போது அந்த நிறுவனத்தைச் சேர்ந்தோர் நினைத்தனராம் இப்படி. பொதுவாக வெளிநாட்டில் உள்ளவர்கள் ரெடிமேட் உடைகளைத்தானே அணிவார்கள். முக்கியமாக ரெடிமேட் உடைகளைத் தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் மூன்றை அணுகினார்கள். ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டனர். அதாவது அவர்கள் இனிமேல் தயாரிக்கவிருக்கும் உடைகளில் சட்டைப்பைகளைப் பெரிதாக வைக்கவேண்டும். இந்த வானொலிகளை வைக்கக் கூடியவகையில். அந்த ஒப்பந்தப்படியே அவர்களும் தயாரித்தனர். அதன்பின் இந்த வானொலிகளும் விற்பனை ஆகியதாம்!

இப்படியெல்லாம் யோசித்து விற்பனையை அதிகரிக்க வேண்டும். தேக்க நிலைவந்தால் தயங்கக்கூடாது. மாற்று யோசனைகளைக் கையாளவேண்டும்.

தலைகீழாகச் சிந்திப்பது சிலவேளைகளில் சிக்கலையும் உருவாக்கிவிடும். ஒருவர் பஸ்கிடைக்கவில்லை என்று தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்தார். காட்டுப்பகுதி அப்போது மோட்டார் சைக்கிளில் ஒருவர் வந்தார். ''என்ன?'' என்று இவரை விசாரித்தார். இவரும் ''பஸ் கிடைக்கவில்லை'' என்றார். அவர் ''கவலைப்படாதீர்கள் எனது மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து கொள்ளுங்கள்! ஒரு நொடியில் கொண்டு போய் விடுகின்றேன்'' என்றார். இவரும் சரியென்று ஏறிவிட்டார். சிறிது நேரத்தில் பார்த்தால் இந்த மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் விழுந்து கிடந்தது. ''ஏன் இப்படிச் செய்தீர்கள்'' என்றார் ஏறியவர். அவரோ ''அதுதான் முதலில் கூறிவிட்டேனே ஒரு நொடியில் கொண்டு போய் விடுகிறேன். நொடி என்பதற்குப் பள்ளம் என்றும் பொருள''என்றார். நொடிக்குப் பள்ளம் என்பதும் அர்த்தம் என்பதை இவர் எப்படிப் பயன்படுத்தியிருக்கிறார் பாருங்கள்.

இளசை எஸ்.சுந்தரம்

# பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறார்

## அமைச்சர் மகேஸ்வரன் அதிருப்தி

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டு உயர்பாதுகாப்பு



வலயம் மற்றும் இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு பாதுகாப்பு அமைச்சில் கூட்டப்பட்ட உயர்மட்ட மாநாட்டின் போது பாதுகாப்பு அமைச்சர் சற்று கடும் போக்கைக் காட்டியுள்ளார் என்று இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸவரன் தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார அமைச்சர். தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் கூட்டப்பட்ட இம்மாநாடு எந்த விதமான முடிவுகளும் எட்டப்படாத நிலையில் தோல்வியில் முடிந்தமை குறித்து அமைச்சர் தி.மகேஸவரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமரும் வரை உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கின்ற காணிகளின் உரிமையாளர்களுடன் ஒப்பந்தம ஒனறைக் கைச்சாத்திடுமாறு அங்கு வலியுறுத்திக் கூறப்பட்டது.



இம்மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றம் கூடும் போது இந்த மாநாட்டில் முடிவுகள் எட்டப்படாமல் முடிவுற்றது குறித்து எனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்

# கிராம அலுவலர்கள் நண்பகல் வரை அலுவலகக் கடமையில் ஈடுபட வேண்டும்

## யாழ்.மாவட்டச் செயலகம் அறிவிப்பு

(காரைநகர்)

யாழ்.மாவட்டக் கிராமசேவையாளர்கள் ஞாயிற்றுக்கிழமை தவிர ஏனைய 6 நாட்களும் காலை 9.00 மணி தொடக்கம் 12.30 வரை கட்டாயமாகத் தமது அலுவலகத்தில் கடமையாற்றவேண்டும். மாவட்டச் செயலகத்தினால், சகல பிரதேச செயலகங்களிற்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையில் மேலும், யாழ். மாவட்டத்தில் தற்போது நடைபெற்று வருகின்ற மீள்குடியமர்தல், நிவாரணம், புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான பொதுமக்களினுடைய பெருமளவு தேவைகள் கிராமசேவை உத்தியோகத்தர்களினால் செயற்படுத்தப்பட வேண்டிய காரணத்தால் அவர்களுடைய கடமை நேரங்களில் மாற்றம் செய்ய வேண்டிய தேவையுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றறிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வருமாறு.

* தமது பிரிவுக்குள் கள அலுவல்கள் செய்வதாயின் பி.ப.12.30 மணிக்குப் பின்னர் அவ் அலுவல்களில் ஈடுபடலாம்.

* பிரதேச செயலகங்களில் நடைபெறும் பகுதி நாள் கூட்டங்கள் மேற்படி தீர்மானத்திற்கு ஏற்ப புதன் கிழமைகளில் நடைபெறும். புதன் கிழமை ஓய்வுநாளாக இருப்பின் வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குப் பின்னர் நடாத்தப்படல் வேண்டும்.

* கிராமசேவை உத்தியோகத்தர்களுடைய அலுவலகப் பெயர்ப் பலகைகள் மக்களுக்குத் தெரியக் கூடிய இடத்தில் வைக்கப்படல் வேண்டும்.

* அரச சார்பற்ற நிறுவனங்கள், நீதிமன்றங்களினால் நடாத்தப்படும் கூட்டங்களிற்குப் பிரதேச செயலருடைய முன் அனுமதி பெறப்படல் வேண்டும். நீதிமன்ற அலுவல்கள் தவிர்ந்த மற்றைய அலுவல்களை அலுவலக நேரங்களில் தவிர்த்துக் கொள்வது முக்கியமானதாகும்.

* கிராமஅலுவலர்களிற்கு வேண்டிய அலுவலகப் பை, தளபாடம், எழுதுகருவிகள் என்பன தேவைப்படும் பொழுது வழங்குவதற்கு 2004 ஆம் ஆண்டில் இருந்து வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந் நடைமுறைகள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் செயற்படுத்தும்படியும் அதற்கு ஏதுவாக மாதம் தோறும் கிராமசேவை உத்தியோகத்தர்களின் அலுவலகங்களைப பரிசீலிக்கும் பொழுது அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவு, அப்பொழுது அவதானிக்கப்பட்ட விடயங்கள் என்பன பற்றிய அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 5 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பிவைக்கும்படியும் கேட்டுக் கொள்வதாக சுற்றறிக்கை மூலம் மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

(உ-246)

## இராசி பலன்

**20. 09. 2003**

**(புரட்டாதி 3,சனி)**

**நவமி- ந.ப. 12.15 வரை**

**திருவாதிரை - மு.ப.11.07 வரை**

**இராகுகாலம் - 09.02- 10.32**

**சுபநேரம் - 03.02- 04.32**

**மேடம்**
சகோதரர் உதவி, தொழில் சிறப்பு, தடைப்பட்டகாரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**இடபம்**
அதிக செலவு, வீண்விவாதம், தொழில் முடக்கம், ரோகநிலை.

**மிதுனம்**
வெகுமானம், நல்ல வரவேற்பு,எடுத்த கருமங்கள் கைகூடும், விருந்துபசாரம்.

**கடகம்**
பிரயாணம்,புத்தசாதுரியம்,நல்ல முயற்சி,மனச்சோர்வு.

**சிங்கம்**
தானியச் சேர்க்கை,எடுத்த கருமங்கள் கைகூடும், கீர்த்தி, குடும்ப மகிழ்ச்சி.

**கன்னி**
எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை, உஷ்ணநிலை, பிறருக்கு உதவுதல்.

**துலாம்**
எதிர்பாராத செலவு, சரீரப் பிரயாசை, நிர்ப்பந்த நிலை, தேசாந்திர வாசம்.

**விருச்சிகம்**
உறவினர் மனஸ்தாபம், பொருள் விரயம், வாகன பயம், திருடர் பயம்.

**தனுசு**
களஸ்திர நன்மை, தேக சௌக்கியம், காரிய நன்மை, பெருமையான சம்பவம்.

**மகரம்**
சந்துருஜெயம், சுவாரஸ்யம், தொழில் விருந்தி, தனவரவு.

**கும்பம்**
எண்ணங்கள் தாமதமாகும், குடும்பக் கவலை,அஜீரணரோகம்,பணத் தட்டுப்பாடு.

**மீனம்**
புதிய விடயம், எடுத்தகாரியம் தாமதமாகும்,ரோகநிலை, உறவினர் சந்திப்பு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## வவு.பொங்குதமிழ் நிகழ்விற்கு

# பொதுமக்களைத் திரட்டும் பணியில் யாழ்.பல்கலை மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் எதிர்வரும் 24ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் கலந்து கொள்ளவென யாழ்.பல்கலைக்கழக மாணவர்குழு ஒன்று நேற்று முன்தினம் வவுனியாவுக்குச் சென்றுள்ளது.

ஏற்கனவே அங்கு சென்ற பல்கலைக்கழக மாணவர்கள், சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை உறுப்பினர்கள் அங்குள்ள பாடசாலை மாணவர்களையும், மக்களையும் சந்தித்து கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதுடன் தனியார் கல்விநிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பொங்கு தமிழ் குறித்த சந்திப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

இச் சந்திப்புக்களின் மூலம் வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வில், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொள்வதற்கு மிகவும் ஆவலாக இருப்பதாக அங்கு சென்றுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்குழு தெரிவித்துள்ளது. (த)

# மக்களின் பங்களிப்புடன் குளங்கள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் அனுசரணையுடன்,கொழும்புத்துறையில் உள்ள இலந்தைக்குளம் மற்றும் நெடுங்குளம் ஆகியன அவ்வப்பகுதி மக்களினால் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அண்மைக்காலமாக மேற்படி குளங்களை அண்மித்த பகுதிகளிலுள்ள குடிநீர்க் கிணறுகளின் நீர்ச் சுரப்புகளில் அடைப்பு ஏற்பட்டதையடுத்தே தற்போது இவை புனரமைக்கப்பட்டு வருகின்றன.

(உ-51)

தக்கா ரினத்தனாய்த் தானொழுக
வல்லானைச்
செற்றார் செயக் கிடந்ததில்.

-குறள்

# வலம்புரி

## என்.எம்.பெரேரா மீண்டு(ம்) வராரா!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிகச் சிறந்த நிதியமைச்சராகப் போற்றப்பட்டவர் கலாநிதி என்.எம்.பெரேரா. உள்நாட்டுப் பொருளாதாரத்தை வளப்படுத்துவதில் அவர் தீட்டிய திட்டங்கள் ஜனநாயகம் என்ற நீரோட்டத்தில் அரசியல்வாதிகள் என்ற சுழியில் சிக்கிச் சின்னாபின்னமாகப்போனதன் விளைவை நாடு இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

உலகெங்கும் திரிந்து பிச்சை கேட்கும் அளவில் நாட்டின் நிலைமை மோசமடைந்துள்ளது. 1977களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியதன் விளைவாக சுயபொருளாதாரம் நிலை குலைந்து போனது, வெளிநாட்டுப் பண்டங்களின் வருகை மேலெழுந்தது.

இவை கலாநிதி என்.எம். பெரேராவின் சிந்தனையை- தூரநோக்கைப் புரிந்து கொள்ளும் ஆற்றல்மிகு அரசியல்வாதிகளுக்கு ஏற்பட்ட பஞ்சத்தால் நிலைத்துப் போன நிகழ்வுகள்.

ஆனால், இதுவிடயத்தில் என்.எம்.பெரேரா நினைவுறுத்தப்படவில்லையாயினும் தற்போது நாட்டில் இடம்பெறுகின்ற வேலைநிறுத்தப் போராட்ட விடயத்தில் அவர் நினைவு கூரப்பட வேண்டியவர்.

அவர் நிதியமைச்சராக இருந்த காலத்தில் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். வங்கித் தொழில் மிக மிக அத்தியாவசியமான தொழில், பணச்சுழற்சிக்கு வங்கிகளின் இயக்கம் மிகவும் அவசியமானது என்பதால் உடனடியாக வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுக் கடமைக்குத் திரும்புமாறு என்.எம்.பெரேரா கோரிக்கை விட்டார். எனினும் அவரின் கோரிக்கையை வங்கி ஊழியர்கள் அசட்டை செய்தனர்.

இதனால் துணிவுடன் செயறப்ட்ட என்.எம்.பெரேரா இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் புதியவர்களை நியமித்து வங்கியை இயக்கினார். அவரின் அதிரடி நடவடிக்கையால் வங்கி ஊழியர்கள் பலர் வேலை இழக்க நேர்ந்ததாயினும். நாட்டு மக்களின் வரிப் பணத்தில் தொழிலாற்றும் ஊழியர்கள் பொறுப்பற்று நடந்தால், அவர்களுக்கு வழங்கக் கூடிய தண்டனை இதை விட வேறு எதுவுமாக இருக்க முடியாது. அவரின் நடவடிக்கைக்குப் பின்னர் வேலை நிறுத்தம் என்ற பேச்சு வங்கித தொழிலில் அறவே இல்லாமற் போனது.

அதேபோன்ற நடவடிக்கையை முன்னெடுக்கக் கூடிய அமைச்சர்கள் இல்லாமற்போனமையால் அத்தியாவசிய சேவைகளில் கூட அடிக்கடி வேலை நிறுத்தம் இடம் பெறுகின்றது.

அதன் ஒரு கட்டமாக தற்போது வைத்தியசாலை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். டாக்டர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட போது ஊழியர்கள் வேலைக்குச் சென்றார்கள்.இப்போது டாக்டர்கள் வேலைக்குச் செலகிறார்கள். ஆனால் ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இத்தகைய பொறுப்பற்ற செயலை தடுக்க என்.எம்.பெரேரா தான் மீண்டு(ம்) வரவேண்டும்.

---

### இயல்பான கவிதை நடையின் மூலம்

# வாசகர் மனதில் பதிந்து நிற்கும் பண்டிதமணி நான்மணி மாலை

வெண்பா, கலித்துறை ஆசிரிய விருத்தம், அகவல் என்னும் செய்யுள் வகைகளால் அந்தாதித் தொடையாகி நடக்க முறையே பாடப்படும் நாற்பது பாடல்களைக் கொண்ட பிரபந்தமே நான்மணி மாலை ஆகும்.




கோவில் நான்மணி மாலை, கும்பிழாவளை விநாயகர் நான்மணி மாலை, நகுலேஸ்வரர் நான்மணி மாலை முதலியன இறைவனை நாயகனாகக் 'கொண்டு, இறைவனை வேண்டுதல் செய்பவனாக- அமைந்துள்ளன போல, பண்டிதமணி நான்மணி மாலை இறைவன் திருவருள் வழி நிற்கும் பண்டிதமணியை, அவர் பெருமை பகரும செய்திகளை, அவர் குருத்துவ நிலையைப் பேசுவதாக அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பண்டிதமணியின் வரலாற்றை பெருந்தன்மைகளை உலகம் அறிய வேண்டும். அவர் வாழ்வு வழி நிற்கக்கூடியதொரு எண்ணத்தை மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டும் என்ற வாஞ்சையோடு இந்நூல் எழுதப்பட்டுள்ளதை இந் நூலின் செய்யுள்கள் மூலம் அறியக கூடியதாக இருக்கிறது.

முன்பு தாம் வழிபடும் இறைவனாகிய கும்பிழாவளை விநாயகன் மீது நான்மணி மாலை பாடிய முதுபெரும் புலவர் வை.க.சிற்றம்பலம் இப்பொழுது அவரது நன்றிக்கும் போற்றுதலுக்கும் வணக்கத்துக்கும் உரியவரான பண்டிதமணிய்ய பாடியிருப்பதிலிருந்து அவரது குருபக்தியின் பரிமளிப்பை அறியக்கூடியதாக இருக்கிறது.

| | |
|---|---|
| நூல்:- | பண்டிதமணி நான்மணி மாலை |
| ஆசிரியர்:- | வை. க. சிற்றம்பலம் |
| விலை:-100/= | |

நான்மணி மாலை என்ற இந் நூலின் பெயர் ''பூவான் மலிமணி நீர்ப் பொய்கைக் கரைனியற் பாவான மொழிஞானப் பாலுண்டு'' எனத் தொடரும் நேரிசை வெண்பாவை முதலாவதாகவுடைய நால்பர் நானமணி மாலையை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது ''பாடென்றெனை யழைத்த பண்டித மாமணியை'' என்று குரு வணக்கத்துடன் நூலை ஆரம்பிக்கும் இந் நூலாசிரியர்,

''சீரிதாய் விளம்ப நேரிதா
யறிந்தே
அரசும் விரும்பி அன்னவர் தனது
சித்திர முகத்தின் முத்திரை தன்
னைப்
பத்திர மாகப் பதிந்து...'' என்றும்.

''அருந் நமிழின் யாப்பை
அணியை அகம்புறத்தைக்
கரும்பாகவே கற்பித்தார் காண''
என்றும்

குறிப்பிடும் பகுதிகள் படித்துப் படித்து இன்புறுதற்குரியது. அந்த வகையில் வந்து நிற்கும் சொற்கள், சொற்றொடர்கள் பண்டிதமணியிடத்துப் புலவருக்குள்ள மதிப்பை, விருப்பை, பற்றுதலை, பணிவை, குருபக்தியை தெரிவிப்பனவாக அமைந்துள்ளன.

''...பாடியும் புகழ்ந்தும்
கைதொழூஉப் பரவிக் காஹுற
வணங்கித்
தெய்வமாய் நின்னைத் தெளிந்
தேன்
உய்யவே நோக்குவாய் உயர்ந்து
நான் விளங்கவே''

என்று பண்டிதமணியைத் தெய்வமாகத் தலையில் தாங்கும் நூலாசிரியர்,

''தேமதுரச் செந்தமிழில் சில
மணியி னொருமணியாகத்
திக்கெட்டும் போற்றி வாழ்த்துஞ்
செல்வமணி வானமேற் திகழுஞ்சிந்
தாமணி
திருநிறை நல் வைதீக மணி!'' என்ற

பாடலின் முதல் அடியிலேயே ஐந்து மணிகளை மணியாக வரிசைப் படுத்துவது படிக்கும் தோறும் பரவச மூட்டுவனவாக விளங்குகின்றது.

''தனங்கிளப் ப,ர்வாழ் தையல்
நல் லாளாம்
வள்ளிப் பிள்ளையின் மணிவயிற்
றுதித்த
புள்ளியாங் கணபதிப்பிள்ளைப்
பெயரினன''

என்ற பாடலில், பண்டிதமணி பறந்த மண்ணையும், அவரைப் பெற்றெடுத்த அன்னையையும தொடர்பு படுத்தும் சொல்லங்கார அழகு சுவைத்து ரசிக்கக்கூடியது.

இவ்வண்ணம் இயல்பான கவிதை ஓட்டத்தினை முதுபெரும் புலவரது செய்யுள்கள் கொண்டிருப்பது மாத்திரமல்ல, வாசிப்பவர் மனதில் ஒரு பதிவை உண்டாக்கக் கூடிய வல்லமை பெற்றிருப்பதும் இந்நூலின் தனிச்சிறப்பாகும். □

### துறனாய்வுக் களம்

பண்டிதர்
சி.அப்புத்துரை

---

# பாராளுமன்ற ஆதரவு இல்லாததால் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டன

## ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் சமாதான



விடயம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில், பாராளுமன்றத்தில் சகல கட்சிகளினதும் ஆதரவைப் பெறமுடியாத காரணத்தினாலேயே என்னால் முன்னெடுக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்கள் தோல்வி கண்டன.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற அமரர் எம்.எச்.அஸ்ரப்பின் நினைவுதினக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முயன்றவர்களில் அமரர்களான நீலன் திருச்செல்வன் உட்பட அஸ்ரப்வரை பல அரசியல் தலைவர்கள் முனைந்தனர்.

ஆனால், இத்தகைய தலைவர்களின் தீர்வு விடயங்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் நிராகரிக்கப்பட்டன.

அமரர் அஸரப்பின் அனுசரணையுடன் பொதுஜன் ஐக்கியமுன்னணி அமைக்கப்பட்ட சமயத்தில், கட்சிகளுக்குள் எவ்வித வேறுபாடுகளும் இருக்கவில்லை.

ஆனால், தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலேயே முரண்பாடுகளும், போட்டிகளும் ஏற்பட்டு இருப்பதாக வெளியான செய்திகளை அறிந்து நான் கவலைப் படுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் உரைநிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலை ஏற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் பாடுபட்ட தலைவர்களுள் அமரர் அஸ்ரப் முக்கியமானவர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் போன்ற தலைவர்களில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட பேச்சுக்களின் அனுபவ அடிப்படையிலேயே, தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

(தி-60)

---

## முன்பள்ளிச் சிறார்களுக்கு போஷாக்குஉணவு

(மருதங்கேணி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி புனாவாழ்வுக் கழகத்தின் கீழ் உள்ள 19 முன்பள்ளி சிறார்களுக்கு போஷாக்கு உணவு வழங்கப்படுகிறது.

மேற்படி 386 முன்பள்ளி சிறார்களுக்கு போஷாக்கு உணவு கீயு, டெக், உலகதரிசனம் ஆகியவற்றின் நிதி உதவியுடன் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி 19 முன்பள்ளிகளில்4 முன்பள்ளிகள் மாத்திரம் நிரந்தர கட்டடத்தில் இயங்குவதுடன் மிகுதியானவை தற்காலிக கொட்டகையில் இயங்கி வருகின்றன.

(உ-35)

## ஒருங்கிணைப்புக் கூட்டம்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10மணிக்கு யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படிக் கூட்டத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப் படவுள்ள மீள்குடியமர்வு, புனரமைப்புப் பணிகள், புனர்வாழ்வு, விவசாயம் மற்றும் சுகாதாரசேவைகள், போக்குவரத்து ஆகியன உள்ளிட்ட மற்றும் பல முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. (உ-36)

---

## தினசரி தியானம்

### குரு வழிபாடு

நிலை பேறுடைமையையும் சாசுவதமான பேரின்பத்தையும் பெற ஒரேவழி குருவழிபாடே. குருநாதரைத் தியானித்தல் ஒன்றே எல்லாத்துன்பங்களையும் கவலைகளையும் போக்கும் குருநாதரின் பாத கமலங்களில் நாட்டமும், தியானமும் மேற்கொள்வதன் மூலம் உண்மையான பேரின்பம் மற்றும் மகிழ்ச்சியின் இரகசியத்தை அறிந்துகொள்ளுங்கள்.

சுவாமி சிவானந்தர்

---

# மழை காலத்திற்கு முன்னர் மனைகள் திருத்தியமைப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள குடத்தனை மற்றும் மணற்காட்டுப் பகுதி முகாம்களில் வசித்துவரும் குடும்பங்களின் வீடுகளை மழைகாலத்திற்கு முன் திருத்திக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர் பணிமனை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனடிப்படையில், மேற்படி பகுதிகளிலுள்ள 3அகதி முகாம்களில் வாழும் 36 குடும்பங்களின் வீடுகள் மிகவிரைவில் புனரமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (உ-35)

## வவுனியா பொங்கு தமிழ் நிகழ்வில்

# ஆயுதங்களுடன் பொலிஸார் நடமாடுவதை தவிர்க்க வேண்டும்!

### கண்காணிப்புக் குழுவுடன் நேற்று சந்திப்பு

(வவுனியா)

வவுனியாவில் எதிர்வரும் 24ம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வு தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நேற்று மாலை சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இச் சந்திப்பில், பொங்குதமிழ் நிகழ்வு நடைபெறும் வவுனியா நகரசபை மைதானத்தில் அன்றைய தினம் பொலிஸார் ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது எனவும் இராணுவத்தினர் வவுனியா நகரில் ஆயுதங்களுடன் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

சந்திப்பில் அரச பிரதிநிதிகள் பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினர், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் மற்றும் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை பொங்கு தமிழ் ஏற்பாட்டுக் குழுவினரின் மேற்படி கோரிக்கை தொடர்பாக ஆராயும் பொருட்டு எதிர்வரும் திங்கட்கிழமை கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்று இடம் பெறவுள்ளது.

இச் சந்திப்பில் வவுனியா பொலிஸ் நிலைய அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-13)

---

**தற்கொலை...**

அமைப்புக்கள் அதனைக் கண்டும் காணாதது போல் சோர்வடைந்திருப்பதாகவும், இந் நிலைமை நாட்டுக்குப் பேராபத்தை உருவாக்கப் போவதாகவும், கட்சியின் சிரேஷ்ட பிரமுகர் ஒருவர் அரசைக கடுமையாகச் சாடியுள்ளார்..

இதே வேளை ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியை குலைக்க வேண்டுமென்ற நோக்கில் தென்னிலங்கையில் கலக்கல் பிரசாரத்தில் ஈடுபடும் பொது ஜன ஐக்கிய முன்னணி சிங்கள மக்களைத் தவறான வழிக்குத் திசைதிருப்பி. ஆதரவு அலையை தம்பக்கம் இழுக்கும் முயற்சியாகவே, மேற்படி சமாதான விரோதக் கருத்துக்களை தெரிவித்து வருவதாக, அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, சமாதான முயற்சியின் சமரச ஏற்பாட்டாளர்களான நோர்வேத் தரப்பினர் அடுத்த மாத நடுப்பகுதியில் சமாதான முயற்சிகள் ஆரோக்கியமான வழியில் நகருமென்று நம்பிக்கை வெளியிட்டுள்ளமையும் இங்கு நோக்கத் தக்கது. (இ)

---

**போலியோ...**

மேற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு சுப்பிரமணிய வித்தியாலயம், மாவட்ட வைத்திய சாலை, பொது நூலகம் ஆகியவற்றில் காலை 7 மணிமுதல் நண்பகல் 12.30 வரை சொட்டு மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது. (த)

---

**இராணுவ..**

அதில் 2576 பேர் இரண்டாவது நேர்முகத் தேர்வுக்கு தெரிவாகியிருந்தனர். இவ்வாறு தெரிவித்த இராணுவ அதிகாரி 2500ற்கு அதிகமானோர் முதலாம் தேர்வில் சித்தியடைந்திருப்பினும் பலர் உடற்தகுதிப் பொருத்தம், மருத்துவ பரிசோதனை போன்றவற்றில் வெற்றி பெறவில்லை. எனினும் இராணுவத்திற்கு 17 600 பேர் தேவைப்படுகின்றனர். படையில் சேர்வதை ஊக்குவிக்குமுகமாக அரசு 55 வீத சம்பள அதிகரிப்பை அறிவித்திருந்தது. அவ்வாறிருந்தும் எதிர்பார்த்தளவானோர் சேர முன்வரவில்லை. என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

---

**பிரதமர்...**

இலங்கையில் அமைதிச் சூழல் ஏற்பட்டுள்ள நிலையில் பிரதமர் ஐ.நா. கூட்டத் தொடரில் உரை நிகழ்த்தவுள்ளமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதேவேளை இக் கூட்டத் தொடரில் யார் பங்குபற்றுவது என்ற முடிவில் ஜனாதிபதியும் பிரதமரும் சர்ச்சைப்பட்டமையும் இங்கு குறிப் பிடத்தக்கது. (இ-5)

---

## அமைச்சர் கிரியல்ல ரஷ்யா விஜயம்

(கொழும்பு)

அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல 8 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று ரஷ்யா, உக்கிரைன் ஆகிய நாடுகளுக்குச் செல்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் விஷேட பிரதிநிதியாகச் செல்லும் இவர் இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையிலான வர்த்தக இடைவெளியை நீக்கும் நோக்குடன் பேச்சக்களை நடத்தவுள்ளார். (ந)

---

**தமிழரின்...**

சமூகங்களுக்கிடையில் அடக்கு முறைகளைக் கையாள முற்படுவதனால் எதனையும் சாதித்து விட முடியாது. தமிழ்-முஸ்லிம்-சிங்கள மக்கள் மத்தியில் பரஸ்பர நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் ஏற்படுத்துவதன் மூலமே நாட்டில் சமாதானத்தை நிலை நாட்ட முடியும்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட உத்தரவாதங்கள் அரசாங்கம் உட்பட அனைத்துத் தரப்பினராலும் மீறப்பட்டுள்ளது.

இதனால் கிழக்கு மாகாணத்தில் அடிக்கடி அசம்பாவிதங்கள் இடம் பெற்று வருகின்றன.

தவிரவும் நாட்டின் சிறுபான்மை இனங்கள் மத்தியில் சுயாட்சி சம்பந்தமான வேட்கை ஆழமாகப் பதிந்து விட்டது. இதனால் ஒவ்வொரு இன மக்களும் தம்மைத் தாமே ஆளும் வகையில் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டியது இன்றியமையாதது என்று கூறினார்.

நிகழ்வில் வீடமைப்புப் பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த)

---

**அரச...**

கூடாது எனத் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை தாம் மீண்டும் வரும் போது நினைவுப் பந்தல்கள் இருக்கக் கூடாது எனத் தெரிவித்த படையினர் அவ்வாறு நினைவுப் பந்தல்கள் இருப்பின் விபரீதமான விளைவுகளைச் சந்திக்க வேண்டி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இராணுவத்தின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் வடமராட்சியில் திலீபனின் நினைவு தினம் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5,43)

---

நெடுங்கேணியில் மீளக்குடியேறுபவர்களுக்கு

## அடிப்படை வசதிகளை வழங்கும் பொறுப்பு புலிகளிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

நெடுங்கேணிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்துள்ள மூவாயிரம் பொது மக்களின் அடிப்படை வசதிகளைச் சீர்செய்து கொடுக்கும் பொறுப்பு விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது விடயம் தொடர்பான கூட்டம் நேற்றுக்காலை நெடுங்கேணியில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ், வவுனியா வடக்கு பிரதேச செயலர், தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையினால் நெடுங்கேணியில் வசித்து வந்த 5 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்திருந்தனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து இதுவரை 3 ஆயிரம் பேர் வரையில் மீளக் குடியமர்ந்துள்ளனர். (த-13)

---

வவுனியா செட்டிகுளப் பகுதியில்

## எரிந்த நிலையில் ஆணின் சடலம்

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் காட்டுப் பகுதியில் இருந்து எரிந்து கருகிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

35 வயது மதிக்கத்தக்க இச் சடலத்தின் கழுத்துப் பகுதியில் கத்தி ஒன்று குத்தியபடி இருந்துள்ளது.

சடலத்தை மீட்ட பொலிஸார் அதனை பிரேத பரிசோதனைக்காக அநுராதபுர மாவட்ட வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் வவுனியா முதலியார் குளப்பகுதியில் வெள்ளை வானில் வந்தவர்களால் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதாகவும், அவ்வாறு கடத்தப்பட்ட இளைஞனே சடலமாக மீட்கப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகிக்கப்படுகிறது. (த-13)

---

## சமாதான முயற்சிகள் மறுசீரமைக்கப்பட வேண்டும்

### நோர்வேக் குழுவிடம் டக்ளஸ் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புத் தொடர வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி வேண்டுகோள் விடுத்துள்ளது.

நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் ஆகியோரை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா கடந்த 17-ந் திகதி சந்தித்துப் பேசியபோதே மேற்கண்டவாறு வேண்டு கோள்விடுத்தார்.

இச் சந்திப்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

இனிமேலும் யுத்தத்தின் விளைவுகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தி தமிழ் மக்களிடம் இல்லை. அதனால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான இறுதித் தீர்வு காண்பதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கு சகல தமிழ் அரசியல் கட்சிகளும் பங்களிப்புச் செய்யக் கூடிய வகையில் சமாதான முயற்சிகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதேவேளை இச் சந்திப்பில் புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தாத்தனும் கலந்து கொண்டார். (இ)

---

அமரர்
கணபதிகணேசன் ஞாபகார்த்தமாக
நடத்தப்பட்ட தரம் 10
மாணவர்களுக்கான
கட்டுரைப் போட்டி
பரிசளிப்பு நிகழ்வு
இடம்:— வலம்புரிக் கேட்போர் கூடம்
காலம் :— 21.09.2003 நாளை(ஞாயிறு) 10 மணி
ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்
கல்விப் பிரிவு
வலம்புரி

காணி விற்பனைக்கு
சுன்னாகம் சூறாவத்தையில் அமைந்துள்ள காலம் சென்ற இ.திருநாவுக்கரசு அவர்களுக்கு உரித்தான 7பரப்புத் தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை
(C-6646)

## வவுனியாவில் படையினர் போர் ஒத்திகை

## பொங்கு தமிழைக் குழப்பத் திட்டம்

(வவுனியா)

வவுனியா நகரில் இராணுவத்தினர் நேற்று முன்தினம் திடீர் போர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

படையினரது இந் நடவடிக்கை தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அதனை எவ்வாறு எதிர் கொள்வது என்பது தொடர்பான ஒத்திகையிலேயே படையினர் ஈடுபட்டதாகக் கூறப்பட்டது.

இதேவேளை எதிர்வரும் புதன் கிழமை நடைபெறவுள்ள பொங்கு தமிழ் நிகழ்வைச் சீர்குலைக்கும் ஒரு நடவடிக்கையாகவும், பொது மக்கள் மத்தியில் பயப்பீதியை ஏற்படுத்தவுமே படையினர் இவ்வாறு யுத்தகால நடவடிக்கைகளில் ஈடுபடுவது போன்று திடீர் போர் ஒத்திகை நடவடிக்கையில் ஈடுபட்டதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந் நிலையில் படையினரது இத்தகைய செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துவதற்குப் பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தொலை நகல் ஒன்றை பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை படையினரது போர் ஒத்திகை நடவடிக்கை தொடர்பாக நேற்று வவுனியா யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கண்டனம் வெளியிடப்பட்டது. (ந-13)

MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
✦ 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
✦ X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.